ஸ்ரீ:.

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 9.] காளயுக்திஹூ கார்த்திகைமீ [ஸஞ்சிகை 2.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம் ததாநே

வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே

ரதிரஸ்து மே அநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

மஹாபாரதம் கொண்டாடும் ப்ராசீந ஸாத்வத ஸம்ப்ரதாயம்.

ரமேஶ சந்த்ர தத்தரைப்போன்ற சிலர், பாரதயுத்தம் நடந்த காலத்தில், தேவதைகளுக்குள் விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் ஏற்றம் ஏற்படவில்லை யென்று யோசிப்பார்கள். ஏனென்றால், அக்காலம் வேதங்களுடைய மந்த்ர ப்ராஹ்மண பாகங்கள் மட்டும் தான் இருந்தனவாம்; அவற்றால் விஷ்ணுவுக்கும் சிவனுக்கும் இதர தேவதைகளைக் காட்டிலும் உத்தீர்ணதையை ஊகிக்க இடமில்லையாம். வேதங்களுக்குள் இதிஹாஸ புராணங்கள் அந்தர்க்கதங்களா யிருந்தன வென்றும், க்ருஷ்ண த்வைபாயநர் அவற்றை வேதங்களினின்று பிரித்தெடுத்து ப்ரத்யேக க்ரந்தங்களாக எழுதினாரென்றும், எழுதுவித்தாரென்றும் யோசிக்க இடமிருப்பதைப்பற்றிப் பலதரம் முன் ப்ரஸ்தாவித்திருக்கின்றோம். அவ்விதிஹாஸ புராணங்கள் விஷயமாக பாஶ்சாத்ய விமர்ஶிகள் யாதொன்றும் சிந்திப்பதில்லை.

அது எப்படியிருந்தாலும், வேதபாகங்களால் விஷ்ணுவுக்கு ப்ராதாந்யதை ஏற்பட மாட்டாதெனும் பக்ஷத்தை நாம் ஆஶ்ரயிக்கின்றோமில்லை. ஆநந்த வருஷம் மார்கழி மாஸத்திய ஸஞ்சிகையில், யாம் சில விஷ்ணுஸூக்தங்களை அர்த்தத்தோடு வெளியிட்டுள்ளோம். அவை, தேவதைகளுக்குள் பகவானுடைய ஸர்வோத்க்ருஷ்டதையை யாவர்க்கும் தெரியக்காட்டுகின்றன. அதைப்பற்றி இங்கே விவரித்து எழுதவேண்டியதாக நமக்குத் தோற்றவில்லை. முமுக்ஷுப்ராப்யமாயும் ஸூரித்ருஶ்யமாயுமிருப்பது வைஷ்ணவம் பரமபதமென்பது ருக்வேதத்திலே தானே ப்ரஸித்தமாயிருக்கிறது. தேவதாந்தர ஸ்தாநங்களுக்கு இவ்வேற்றம் சொல்லப்படவில்லை. த்ரிதஶர்களின் ஶத்ருக்களைப் பகவான் நிரஸித்து, த்ரிதஶர்களுக்கு உபகரிக்கும்படியாகவே, இந்த்ரனுக்கு அநுஜனாய் அவதரித்தாரென்பது வேதமந்த்ர நிஶ்சயம். அவருடைய த்ரிவிக்ரமத்தால் தேவதைகள் ஸ்வாதிகாரங்களில் நிலைகொண்டு பூராதிலோகங்களை ஸம்ரக்ஷித்தார்கள்; ஸர்வலோகங்களையும் லோகாதிபர்களான தேவதைகளையும் பகவான் ஸ்ருஷ்டித்தார்; ஸர்வரக்ஷகனும் அவரே; யாவர்க்கும் முதல்வனாயிருந்தும், நித்யமும் நூதநனுமாயிருப்பவர் அவர்; இத்யாதி நிஶ்சயங்கள் விஷ்ணுஸூக்தங்களாலேயே ஏற்படுகின்றன. இவை பகவானுடைய த்ரிவிக்ரமாவதார ஸம்பந்தமாக ஏற்பட்டன. ஆகிலும், அவனுடைய பரஸ்வரூபத்தை, 'விஷ்ணோர்யத்பரமம்பதம்', 'விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:', என்றும், அவன் வைகுண்ட நிலயனென்பதை, 'க்ஷயம் வீரஸ்ய ராஜஸோ விமானே' என்றும் ஸ்பஷ்டமாக வேதஸூக்தங்கள் சொல்வன.

இந்த விஷயமாக நுனிப்புல்மேய்பவர் யோசனைகளைத்தள்ளி, பாஶ்சாத்ய வித்யாபாரங்கதரான அரவிந்தகோஸ் என்பவருடைய யோசனையை, நளவருஷம் ஐப்பிசி மாஸம் ஸஞ்சிகையில் விவரித்திருக்கின்றோம். "ருத்ரன் தாமஸ தேவதையானாலும், லோகஹிதம் செய்பவர். விஷ்ணுவினுடைய பரமாநந்ததா ஸ்வரூபத்தை அவர் நெருங்குகின்றார். விஷ்ணுவானவர் லோகத்துக்கும் தேவர்க்கும் அநுகூலத்தில் ஸதா ப்ரவ்ருத்திக்கின்றார்." "த்ரிமூர்த்திகளாய் வேதத்தில் விளங்கும் விஷ்ணு ருத்ரன் ப்ரஹ்மணஸ்பதி இவர் மூவரும் வேதக்ரியைகளுக்கு ஆதாரபூதர்க

ளாய் இருந்து, பரோக்ஷத்தில் அவற்றிற்கு ஸஹாயம் செய்கின்றார்கள்.'' "ப்ரஹ்மணஸ்பதியானவர் ஶப்தத்தை அதாவது வர்க்கை ஸ்ருஷ்டிக்கின்றார்; தமஸ்ஸிலிருந்து ப்ரகாஶத்தையும் ப்ரபஞ்சத்தையும் வெளிப்படுத்துகின்றார்; சேதநனுடைய ஆவிர்ப்பாவ க்ரமத்துக்கு அவர் காரணமாகின்றார்; இவரைப் புராணங்களில் 'ப்ரஹ்மா' என்று சொல்கின்றனர். ப்ரஹ்மாவால் ஸ்ருஷ்டிக்கப்பட்டுப் படிப்படியாக உயர்கின்ற சேதநர்க்குத் தக்கப்படி ருத்ரன் பலம் அளிக்கின்றார்; சேதநருடைய சைதந்ய ப்ரகாஶத்தின் பொருட்டு அவர் உபகரிக்கின்றார்; ...... புராணங்களில் இவரைத்தான் ஶிவன் என்பார்கள்.'' ப்ரஹ்மணஸ்பதியினுடைய ஶப்தங்கள் ரூபமெடுக்கவும், ருத்ரனுடைய பலம் வ்யாபாரவத்தாகவும், நிலைத்த ஆதாரமாக விஷ்ணு இருக்கின்றார்; அதாவது தேசமும் (Space), லோகங்களினுடைய ஸஞ்சார நியமங்களும், ஸ்தானங்கட்குப் படிப்படியாக ஏற்பட்ட ஏற்றங்களும், பரமபதமும் அவருடையன; அவர் மூன்று அடிகளை வைத்தார்; அவ்வடிகளின் வைப்பால் ஏற்பட்ட தேசவிஶேஷத்திற்குள், அவர் ஸர்வ லோகங்களையும் நிலைநிறுத்தினர்; ஸர்வ வ்யாபியான அவர், அந்த எல்லா லோகங்களிலும் இருக்கின்றார்; எல்லாத் தேவர்களும் தத்தம் வ்யாபாரங்களைச் செய்வதற்கு அவர் ஸஹகரிக்கின்றார்; ஆநந்தம், ஜ்யோதிஸ், ப்ரியம்பதம், இவற்றால் அமைந்த அவருடைய பரமபதமானது ப்ரகாஶிக்கின்றதோர் நேத்ரத்தைப்போல் ஆகாசத்தில் ப்ரவியிருக்கின்றது. அதை ஸூரிகள் தர்ஶிக்கின்றார்கள்; வேத நிர்த்திஷ்டமானதும் ஸர்வ சேதநர்களுடைய ப்ரயாணத்தின் பாரமாகவும், விஷ்ணுவின் பரமபதம் இருக்கின்றது. அந்த விஷ்ணுதான் புராணத்தில் நாராயணனெனப்படுகின்றார்."

இவ்வண்ணமும், இன்னும் மிகவும் விஸ்தாரமாகவும் 'ஆர்யா' பத்ராதிபர் யோசனைகளை நாம் விவரித்திருக்கின்றோம். அவற்றை நளஹூ ஐப்பசிமாஸ ஸஞ்சிகையில் கண்டுகொள்வது. அவற்றால், ஸர்வேஶ்வரனும் ஸர்வகாரணனும் முக்திப்ரதனும் பகவானென்பதும், அவனே ஸ்ருஷ்டி ஸம்ஹார கார்யங்களை ரூபாந்தரங்களைக்கொண்டு செய்விக்கின்றானென்பதும், ருக்வேத ஸூக்தங்களின் நிஶ்சயமென்று ஏற்படுகின்றது. ஆதலால் பாஶ்சாத்ய வித்யையில் சிறந்தவர்களும் இவற்றை ஶ்ரத்தையுடன் யோசித்

தாராகில் நம் ஸம்ப்ரதாயஸ்தர்களுடைய விஸ்வாஸத்தை விலகி நிற்க இடமில்லை யென்று சொல்கின்றோம்.

ஆதலால், பகவானுக்கு ஒரு நூதந கௌரவத்தை உண்டாக்க வென்று வ்யாஸர் பாரதம் செய்தவரல்லர். வேதாந்தத்துக்கு மூலத்தை வேத பாகங்களில் காணவேண்டியதென்பதை ஆர்யா பத்ராதியர் ஒப்புக்கொள்கின்றார். '𑌅𑌨𑌨𑍍𑌤𑌾 𑌵𑍈 𑌵𑍇𑌦𑌾𑌃', என்கிற வசநப்படியே, அநந்தமாக முன்னிருந்த வேதபாகங்களனைத்தும் இப்போது இருப்பதாக எண்ணக்கூடாது. உபநிஷத் ப்ரதேசங்களில், '𑌤𑌦𑍇𑌷𑌾𑌭𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾, 𑌤𑌦𑌪𑍍𑌯𑍇𑌷 𑌶𑍍𑌲𑍋𑌕𑍋 𑌭𑌵𑌤𑌿, 𑌤𑌦𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾 𑌭𑌵𑌨𑍍𑌤𑌿', என்கிற வாக்யங்கள், உபநிஷத்தினுடைய தத்வங்கள், அதனுடைய ஆவிர்ப் பாவ காலங்கட்கு முன்னமே, ஸ்லோக ரூபமாயும், வசந ரூபமாயும், சில ஆசார்ய பரம்பரைகளால் ரக்ஷிக்கப்பட்டனவென்று காட்டுகின்றன. '𑌇𑌤𑌿 𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌯𑍇 𑌨𑌸𑍍𑌤𑌦𑍍𑌵𑍍𑌯𑌾𑌚𑌚𑌕𑍍𑌷𑌿𑌰𑍇', என்கிற உபநிஷத் வாக்யமும் அந்த யோசனையைப் பலப்படுத்துகின்றது. ப்ருஹதாரண்யகோபநிஷத்தில் மிகவும் விஸ்தரித்தவையும், அத்யாத்ம ஸம்பந்தமாய் ஏற்பட்டவையுமான குருபரம்பரைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. '𑌸 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌮𑌥𑌰𑍍𑌵𑌾𑌯 𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌯 𑌪𑍍𑌰𑌾𑌹', என்பவைபோல், பல ஸ்ருதிகள் ப்ரஹ்மா முதல் அத்யாத்மவித்யா பரம்பரைகள் விஸ்தரித்தனவெனக் காட்டுகின்றன. பூர்வ வித்யைகள் உபநிஷத் ஸரீரத்தைக்கொண்டு நமக்குப் புலப்பட்ட காரணத்தையிட்டே, அவை முற்காலங்களில் ரூபாந்தரங்களோடு ப்ரகாசிக்கவில்லையென்று சொல்ல முடியாது. ஆதலால் பூர்வ காலங்களில் இருந்த இதிஹாஸ புராணங்களுக்குப் பாரதாதி ஸரீரங்கள் உண்டான காரணத்தாலேயே, பாரதரூபமாக ஏற்பட்ட வ்யாஸ மதம் அதன்முன் இருந்ததில்லையென்று யோக்யன் சொல்லத் துணியமாட்டான்.

நள ௵ வைகாசிமாஸ ஸஞ்சிகையில், குருபரம்பராஸாரத்தைச் சிந்திக்குமிடம், "பகவத் சாஸ்த்ரத்தை க்ருத யுகத்தில்

பகவான் தானே யருளிச்செய்தனர். * * * ஶாந்தி பர்வம், 343-வது அத்யாயத்தில், இந்த பகவத் சாஸ்த்ர மாஹாத்ம்யத்தை ப்ரபஞ்சிக்கு மிடத்தே, 'அந்த ராஜன் (உபரிசரவஸு) இறந்தபிறகு, ஸநாதநமான இந்த சாஸ்த்ரம் அந்தர்த்தாநத்தை அடையப்போகின்றது. இதெல்லாம் என்னால் உங்கட்குச் சொல்லப்பட்டது' என்று புருஷோத்தமன்தானே ஸப்த ருஷிகளுக்கு உரைத்தான் என்று வசநமிருக்கின்றது. * * * விச்சிந்நமாய்ப்போன அதே ஸம்ப்ரதாயத்தைத் தானே மறுபடியும் பகவான் ப்ரகாசிப்பித்தான். * * * பகவத் கீதை நாலாவது அத்யாயம் முதலில், 'ஶாஶ்வதமான இந்த (கர்ம) யோகத்தை மந்வந்தரம் முதலில் நான் விவஸ்வானுக்கு உபதேசித்தேன். விவஸ்வான் மநுவுக்கும், மநு இக்ஷ்வாகுவுக்கும் உபதேசித்தனர். இப்படி ஸம்ப்ரதாய பரம்பரையாக ப்ராப்தமான இதை (பூர்வம்) ராஜர்ஷிகள் அறிந்தனர். அந்த யோகம் பஹு காலத்தின் பிறகு இவ்வுலகில் நஷ்டமாய்விட்டது. புராதநமான அந்த யோகமே என்னால் இப்போது உன்பொருட்டுச் சொல்லப்பட்டது. * * * என்று பகவான் அர்ஜுநனுக்கு வெளியிட்டார் என்றுரைத்தோம்.

ஶாந்திபர்வ மோக்ஷ தர்ம ப்ரகரணத்தில், ஜநமேஜயன், 'ஸுஹோபநிஷதாஸ் வேதாஸ் ஸாங்கா ஸ்வாத்யாயினஸ்ஸதா। யதீநாம் ப்ரஹ்மசாரிணாம் தேப்யோ விஶிஷ்டாம் ஜாநாமி ஏகாந்திநாம் கதிம் ।' என்று, ஸநியமமாக வேதவேதாங்கங்களை அத்யயநம் செய்கின்ற விப்ரர்களையும், யதிதர்மநிஷ்டர்களையும் காட்டிலும், பகவதேகாந்த பக்தர்களுடைய கதியை உத்க்ருஷ்டமென்று அறிந்துகொண்டு, அந்த ஏகாந்திகளுடைய மதம் யாரால் சொல்லப்பட்டதென்றும், அவர்களுடைய சர்யா விவரத்தையும் அதனுடைய உத்பத்தியையும்பற்றி வைஶம்பாயநரைக் கேட்டான். அதைப்பற்றி நாரதர் ஸ்ரீ க்ருஷ்ணன், பீஷ்மர், இவர்களுடைய முன்னிலையில் அர்ஜுநனுக்குச் சொன்னதாகவும், வ்யாஸர் நாரதரிடம் கேட்டு அதைத் தனக்குச் சொன்னதாகவும் வெளியிட்டு, பிறகு வைஶம்பாயநர் ப்ரஸ்தாபிக்கத் தொடங்கினர். அது ஸங்க்ரஹித்து எழுதப்படுகின்றது. ஏகாந்திகள் தர்மம் அக்ருதாத்மாக்களால் அறியக்கூடியதன்று. ஸாமு

வேதாநுஸாரமாக க்ருதயுகத்தில் அது உத்பவித்தது. ஸ்ரீமந் நாராயணனே அதைத் தரிக்கின்றான். பகவானுடைய மாநஸ புத்ரனாக ப்ரஹ்மா உண்டானபோது, கடல் நுரையைப் புஜித்து ஜீவிக்கும் சில ருஷிகள் அதைப் பகவானிடம் பெற்றார்கள்; அவர்களிடம் வைகாநஸரெனும் ருஷிகள் அதைப் பெற்றார்கள்; அவர்களிடம் ஸோமனடைந்தான்; பிறகு அது அந்தர்த்தாநத்தை யடைந்தது. மறுபடி ப்ரஹ்மா நாராயணனுடைய கண்களி னின்று ஜநித்தபோது, ப்ரஹ்மா ஸோமனிடம் அந்தத் தர்மத் தை க்ரஹித்து ருத்ரனுக்கு உபதேசித்தார்; ருத்ரன் க்ருத யுகத் தில் அதை வாலகில்யர்களெனும் ருஷிகளுக்குச் சொன்னார்; மறு படியும் பகவந் மாயையால் அந்தத் தர்மம் அந்தர்த்தாநமடைந் தது. மறுபடி பகவானுடைய வாக்கினின்று ப்ரஹ்மா உண்டான போது, அந்தத் தர்மம் நாராயணனிடத்தில் நின்று உதித்து, ஸு பர்ணரெனும் ருஷியால் க்ரஹிக்கப்பட்டது; அதில் அவர் மஹா தபஸ்ஸாலும், நியமங்களை யநுஷ்டித்தும், 'த்ரிஃஸௌபர்ணம் தவாந' மூன்றுதரம் வித்தி பெற்றார்; ஆதலால் இந்த உத்தம தர்மத்தை த்ரிஸௌபர்ணமெனச் சொல்வார்கள்; இது ருக்வேதத்தில் சொ ல்லப்படுகின்றது. இதை வாயு ஸுபர்ண ருஷியினிடம் பெற் றார்; அவரிடம் ஹவிஸ்சேஷாஸிகளான சில ருஷிகள் பெற்றார் கள்; அவர்களிடம் ஸமுத்ர ராஜனடைந்தார்; மறுபடியும் அது அந்தர்த்தாநமடைந்தது. பிறகு நாராயணனுடைய ஸ்ரவணத்தி னின்று ப்ரஹ்மா ஆவிர்பவித்தபோது, நாராயணன் ப்ரஹ்மாவை ஜகத் ஸ்ருஷ்டி விஷயமாக ஆஜ்ஞாபிக்கும் ஸமயத்தில், 'யுகாநுரூபம் ஸர்வேஷாம் லோகாநாம் ஹிதம் ... ' என்று ஸாத்வத மெனப்பட்ட ஏகாந் திகளுடைய தர்மத்தைப் பகவான் ப்ரஹ்மாவுக்கு உபதேசித்தார்; அதனால் க்ருதயுகம் ஸ்தாபிக்கவும்பட்டது; ப்ரஹ்மா ரஹஸ்ய ஸஹிதமாய் அந்த ஸாத்வத தர்மத்தை ஆரண்யத்துடன் பகவா னிடம் க்ரஹித்தார்; 'தம் கார்த்தயுகம் தர்மம் நிராஸீஃகர்ம ஸம்ஜ்ஞிதம்', என்கிறபடியே, அந்த க்ருதயுக தர்மமானது நிஷ்காம கர்மயோக மெனப்பட்டது; அந்த ஸாத்வத தர்மமானது க்ருத

யுகத்தில் லோக மெங்கும் பரவி நின்றது; ‘[illegible] ப்ரஹ்மலோகவிஸ்ருஷ்டஶ்ச । [illegible] ஹரிம் நாராயணம் ப்ரபும் ॥’ என்கிறபடியே, ஸாத்வத ஸம்ப்ரதாயத்தை ப்ரஹ்மா ஸ்வயம் அநுஷ்டித்துப் பகவானை அர்ச்சித்தார்; பிறகு லோக ஹிதத்தை யோசித்து, அந்த ஸம்ப்ரதாயத்தை ப்ரஹ்மா ஸ்வாரோசிஷ மனுவுக்கு உபதேசித்தார்; அந்தமநு அதை ஸ்வபுத்ரனுன ஶங்கபதருக்கு உபதேசம் செய்தார்; ஶங்கபதர் தன் புத்ரனுன ஸுதர்மாவுக்குச் சொன்னுர்; பிறகு த்ரேதா யுகம் வரவே, அந்த ஸம்ப்ரதாயம் லோபத்தை அடைந்தது. மறுபடி பகவானுடைய மூக்கினின்று ப்ரஹ்மா உண்டானபோது, பகவான் ப்ரஹ்மாவின் முன்னிலையில் இந்தத்தர்மத்தை வெளியிட, ப்ரஹ்ம புத்ரரான ஸநத் குமாரர் அதை அத்யயநம் செய்தார்; அவரிடம் வீரணரெனும் ப்ரஜாபதி அதை அக்க்ருத யுகத்தில் க்ரஹித்தார்; அவர் ரைப்யர்க்குச் சொன்னுர்; அவர் ஸ்வபுத்ரரான குக்ஷி பாலர்க்குச் சொன்னுர்; மறுபடியும் அத்தர்மம் அந்தர்த்தானத்தை யடைந்தது. பிறகு பகவானுல் ஸ்ருஷ்டமான அண்டத்தினின்றும் ப்ரஹ்மா உண்டானபோது, ஸ்ரீமந் நாராயணனுல் உபதேசிக்கப்பட்டு, அந்தத் தர்மம் ப்ரஹ்மாவால் க்ரஹிக்கப்பட்டு, யதாவிதி அநுஷ்டிக்கவும்பட்டது; பர்ஹிஷதாள் எனும் முனிகள் அதை ப்ரஹ்மாவினிடம் பெற்றுர்கள்; அவர்களிடமிருந்து ஸாமவ்ருதனென்கிற த்பாதி பெற்று, ஸாமவேதமறிந்த ஜ்யேஷ்டரெனும் த்விஜர் அதைப் பெற்றுர்; அவரிடம் அவிகம்பநனெனும் ராஜன் அதை அடைந்தார்; மறுபடியும் தர்மம் லோபத்தை யடைந்தது. பிறகு பகவான் நாபீகமலத்தினின்று ப்ரஹ்மாவுக்கு ஏழாவது ஜந்மம் உண்டானபோது, பகவான் அத்தர்மத்தை ப்ரஹ்மாவுக்குப் புநருபதேசம் செய்தருளினுர்; அவரிடம் தக்ஷரும், தக்ஷரிடம் அவர் தௌஹித்ரரான ஆதித்யனும், ஆதித்யனிடம் விவஸ்வானும், அந்தத் தர்மத்தை க்ரமேண பெற்றனர்; த்ரேதா யுகத்தின் ஆதியில் விவஸ்வான் அதை மநுவுக்குச் சொன்னுர்; லோகத்தின் ஶ்ரேயஸ்ஸை உத்தேசித்து, மநு அதை இக்ஷ்வாகுவுக்கு உபதேசித்தனர்; இக்ஷ்வாகுவால் அத்தர்மம் லோகத்தை வ்யாபித்து நின்றது; லோக க்ஷயாவஸரத்தில் அது மறுபடி பகவானிடம் லயித்துவிடும்.

இவ்வண்ணம் வைஶம்பாயனர் ஜநமேஜயனுக்குச் சொன்னார். சதுர்முகனுடைய பல ஆவிர்ப்பாவங்களைப் பற்றிச் சரித்ர விமர்ஶிகள் ஆக்ஷேபம் செய்வார்கள். ஆகிலும், ஸாத்வதமென்றும், நிஷ்காமமென்றும் வ்யவஹரிக்கப்பட்ட தர்மமானது ஏகாந்திகளான பாகவதர்களால் லோகத்தில் அநாதியாகவும், பகவத்பக்தி பரவின காலமுதற்கொண்டும், அநுஷ்டிக்கப்பட்டதென்று காட்டுவதற்கு மேலே விவரித்த மோக்ஷ தர்ம ப்ரகரணம் போதுமானது. முடிவாக, இந்த மஹா யுகத்தில் அது இக்ஷ்வாகு வம்ஶத்தினர்களால் அநுஷ்டிக்கப்பட்டது. ஸ்ரீ கீதாசார்யனும், 'மயி ஸர்வாணி கர்மாணி ஸந்ந்யஸ்யாத்யாத்மசேதஸா | நிராஶீர்நிர்மமோ பூத்வா யுத்யஸ்வ விகதஜ்வர: ||' என்கிறபடியே, ஆத்ம ஜ்ஞாந விஶிஷ்டராய் நிஷ்காமகர்மங்களைப் பகவத் ப்ரீணநங்களாகச் செய்யவேண்டுமென்கிற 'மதமிதம்', என்று பகவந்மதமாகப் பகவானால் கொண்டாடப்பட்டதும், ஸாத்வதம் என்றும் ஏகாந்திகள் தர்மம் என்றும் சொல்லப்பட்டதுமான ஸம்ப்ரதாயத்தை, 'இமம் விவஸ்வதே யோகம் ப்ரோக்தவாநஹமவ்யயம் | விவஸ்வாந் மநவே ப்ராஹ மநுரிக்ஷ்வாகவேऽப்ரவீத் || ஏவம் பரம்பராப்ராப்தமிமம் ராஜர்ஷயோ விது: | ஸ காலேநேஹ மஹதா யோகோ நஷ்ட: பரந்தப ||' என்கிறபடியே, மேலெடுத்த வைஶம்பாயந வசநத்தையொட்டியே, தான் ஸ்வயம் இக்ஷ்வாகுவம்ஶஸ்தர்களுக்கு உபதேசித்தவகையை வெளியிட்டார்.

ஸாத்வதமெனப்பட்ட ஸத்ஸம்ப்ரதாயம் இக்ஷ்வாகு வம்ஶஸ்தர்களால் அநுஷ்டிக்கப்பட்டு வந்தது என்பதற்கு த்ருஷ்டாந்தமாக ஸ்ரீராமனுடைய காலத்திலும் அந்த ராஜர்களுடைய க்ருஹத்தில், 'ஸஹ பத்ந்யா விஶாலாக்ஷ்யா நாராயணமுபாகமத் | ப்ரக்ருஹ்ய ஶிரஸா பாத்ரீம் ஹவிஷோ விதிவத்ததா | மஹதே தைவதாயாஜ்யம் ஜுஹாவ ஜ்வலிதேऽநலே | த்யாயந் நாராயணம் தேவம் | ஸ்ரீமத்யாயதநே விஷ்ணோ: ஶிஶ்யே நரவராத்மஜ:' என்கிறபடியே, ஸ்ரீமந்நாராயணன் கோயில்கொண்டு அர்ச்சாரூபியாக எழுந்தருளி

யிருந்து, அவர்களால் ஆராதிக்கப்பட்டார் என்று ஸ்ரீமத்ராமாயணத்தில் அயோத்யாகாண்டத்தில் சொல்லப்படுகின்ற விஷயத்தைத் தடஸ்தர்கள் யோசிக்கவேண்டும். மறுபடி உத்தரகாண்டத்தில் சக்ரவர்த்தித் திருமகன் விபீஷணனை நோக்கி, 'ஆராதய ஜகந்நாதம் இக்ஷ்வாகுகுலதைவதம் । ஆராதநீயமநிஶம் ஸதேவைர்தேவைஸ்ஸவாஸவை:' என்று சொன்ன விஷயமும் யோசிக்கத்தக்கது. ஸ்ரீமந்நாராயணன் இக்ஷ்வாகு வம்ஶஸ்தர்களுடைய குலதெய்வம்; ஸாத்வத ஸம்ப்ரதாயாநுஸாரிகளான ப்ரஹ்மேந்த்ராதி ஸர்வதேவதைகளாலும் பகவான் ஆராதிக்கப்பட்டவர் என்பது ஸ்பஷ்டமாகின்றது. பாத்ம புராணத்திலும் ரகுநாதன் 'ஸ்ரீரங்கஶாயிநம்' என்றும் 'இக்ஷ்வாகுகுலதைவதம்' என்றும் விவரிக்கப்பட்ட ஸ்வகுலத்தினுடைய ஆராத்ய தேவதையை விபீஷணனுக்குக் கொடுத்தாரென்று சொல்லப்படுகின்றது. விபீஷணனும், 'ரங்கம் விமாநமாதாய லங்காம் ப்ராயாச்ச', என்கிறபடியே, மந்த்ரமூர்த்தியான ஜநார்த்தநனை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு போய், ஸ்ரீரங்கத்தில் ப்ரதிஷ்டைபண்ணினர் என்று அதே புராணம் வெளியிடுகின்றது. அது தான் 'நான்முகத் தயன்பணித்த கோயிலென்றும்,' 'அம்புயத்தோ னயோத்திமன்னர்க்களித்த கோயி' லென்றும் சொல்லப்படுகின்றது.

ப்ராசீந ஸம்ப்ரதாயத்தைத் தான் ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுநனுக்குப் பகவத்கீதாரூபமாயும், ஸ்வபக்தர்களான உத்தவாதிகளுக்கு ரூபாந்தரத்தை அவலம்பித்தும் உபதேசம் செய்தார். இது பலதரம் பூர்வகாலத்தில் லுப்தமாய்ப் போய்ப் பகவானால் பலதரம் வெளிப்படுத்தப்பட்டது. "ஸர்வலோகத்துக்கும் பரமாசார்யனை ஸர்வேஶ்வரன், ப்ரஹ்மா * * * முகமாக ஶாஸ்த்ரங்களை ப்ரவர்த்திப்பித்தும், * * * ஸநத்குமாராதிகள் * * * முகங்களாகவே ஹிதப்ரவர்த்தநம் பண்ணுவித்தும், இப்படியே மற்றும் நாரத பராஶரஶுக ஶௌநகாதிகளான பல மஹர்ஷிகளையிட்டு அத்யாத்ம ஶாஸ்த்ரம் குலையாதபடி நடத்தியும், * * * வ்யாஸாதிகளை அநுப்ரவேஶித்து நின்று மஹாபாரத ஶாரீரகாதிகளை ப்ரவர்த்திப்பித்தும், ஹம்ஸ மத்ஸ்ய ஹயக்ரீவ நாரா

யண கீதாசார்யாத்யவதாரங்களாலே தானே வெளிநின்று தத்வ ஹித புருஷார்த்தங்களை ப்ரகாசிப்பித்தும்,'' என்று தேசிகனும் இந்த விஷயத்தை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரத்தில் விவரித்தார். ஸாத்வதமென்றும், பகவத் சாஸ்த்ரமென்றும், ஸ்ரீ பாஞ்சராத்ர மென்றும் ப்ரஸித்தியடைந்த ஸம்ப்ரதாயத்தை விவரிக்குமிடம் மோக்ஷ தர்மத்தில், பீஷ்மர் வாக்யமாக, '[illegible] ॥' எனும் ஸ்லோகங்கள் ப்ரகாசிக்கின்றன. அவற்றால், ஸ்ரீ பகவான் முற்காலங்களில் தானே காட்டியருளிய ஸாத்வதம் எனும் ஸத்ஸம்ப்ரதாயத்தை த்வாபரயுகாந்தத்தின் முடிவில் மறுபடியும் ஸ்வயமே ஆவிஷ்கரித்தனன் என்பதும், அது ஸர்வ வர்ணஸ்தர்களும், க்ருதலக்ஷணர்களாய், ஸ்வகர்மங்களை நிஷ்காம கர்மங்களாயும் பகவத் ப்ரீணநமாகவும் செய்துகொண்டே, ஸ்வரூபத்தால் தங்கட்குண்டாயிருக்கும் பகவத்தாஸ வ்ருத்தியைப் பகவானுடைய ஆராதந ரூபமாகப் பண்ணத்தக்கவர்களென்றும் ஏற்படுகின்றது.

'[illegible] ॥ * * * [illegible] । * * * [illegible] ॥ [illegible]

[illegible] । [illegible] । [illegible] ॥ * * * [illegible] 𑌯𑌾𑌂𑌤𑌿 𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌰𑌾𑌯𑌣𑌾𑌃 । 𑌤𑌦𑍇𑌵 𑌪𑌰𑌮𑌂 𑌸𑍍𑌥𑌾𑌨𑌂 𑌵𑍈𑌕𑍁𑌣𑍍𑌠𑌂 𑌹𑌰𑌿𑌵𑍇𑌶𑍍𑌮 ॥'

இவ்வண்ணம், வைசம்பாயநர் ஸ்வோபந்யாஸத்தை முடிக்கின்றார். ஸாத்வத ஸம்ப்ரதாயம் அநாதியென்றும், அதனுடைய தர்மம் அஹிம்ஸையை ஆச்ரயித்ததென்றும், அதை ஜ்ஞாநத்துடனும் ச்ரத்தையுடனும் அநுஷ்டிப்பதால் பகவான் ப்ரீதனுகின்றானென்றும், பகவான் ஒரு வ்யூஹஸ்திதனுயும், பல வ்யூஹஸ்திதனுயும், பக்தர்களுகந்தபடியே தர்சநமளிக்கின்றானென்றும், இந்தத் தர்மத்தைப் பரிபாலிக்கும் ஏகாந்திகள் துர்லபர் என்றும், அவர்களால் ஜகத் வ்யாப்தமாகில் க்ருதயுகம் உண்டாய்விடுமென்றும், அவர்கள் ஆத்மஜ்ஞாநமுள்ளவரென்றும், தயையுள்ளவர்களென்றும், ஸர்வபூதங்களிடமும் ஹிதத்தைச் செய்பவர்களென்றும், நாரதர் அத்தர்மத்தை ஸாக்ஷாத் நாராயணனிடம் பெற்றாரென்றும், அவரிடம் அதை வ்யாஸர் க்ரஹித்தாரென்றும், நாராயண பராயணர்களான ஏகாந்திகள் வஸிக்குமிடமே வைகுண்ட ஸமமானதென்றும் வெளியிடப்பட்டது.

பரமைகாந்திகள் மதம் அநாதியானது. வேதங்களுடைய கர்ம காண்ட ஸம்பந்தமாக ஸர்வ த்விஜர்களாலும் அநுஷ்டிக்கப்பட வேண்டியவைகளாய் ஏற்பட்ட தர்மங்கள் அம்மதத்துக்கு அங்கத்வேந விதிக்கப்பட்டன. உபநிஷத் பாகங்களால் நிஷ்கர்ஷிக்கப்பட்ட தத்வஜ்ஞாநம் அந்த ஸம்ப்ரதாயத்துக்கு முக்யமாக வேண்டப்படுகின்றது. வேதாந்தங்கள் விதித்த பக்தி யோகத்தோடு ஏகாந்திகள் ஸம்ப்ரதாயத்தால் அறியப்பட்ட ந்யாஸவித்யையும் பகவத் ப்ராப்தியின்பொருட்டு அந்த ஸம்ப்ரதாயஸ்தர்களால் உபாயமாக யோசிக்கப்பட்டது. அவர்கள் பகவத்பக்தியெனும் கடலில் ஆழ்ந்து, பகவதநுபவ விச்சேதத்தை ஈஷத்தும் ஸஹிக்காதவர்கள்; பகவானுக்கென்றே உயிர் தரிப்பவர்கள்; தாஸத்வாநுரூபக்ரியைகளால் பகவானை விடாமல் ஆராதிப்பவர்கள்; தர்மத்தின்பொருட்டு ச்ரத்தையோடு முயல்கின்ற இப்படிப்பட்ட ஏகாந்திகளில் யாரேனுமொருவர் வஸிக்குமிடத்தை இவ்வுலகில் வைகுண்ட கல்பமாகத் தேசிகன் ஸாதித்தருளினர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

ஸ்ரீ ப க வ த் கீ தா.

தத்ராபஶ்யத் ஸ்திதாந்பார்த: பித்ரூநத பிதாமஹாந் ।
ஆசார்யாந்மாதுலாந்ப்ராத்ரூந்புத்ராந்பௌத்ராந்ஸகீம்ஸ்ததா ॥ 26.

ஶ்வஶுராந் ஸுஹ்ருதஶ்சைவ ஸேநயோருபயோரபி ।
தாந்ஸமீக்ஷ்ய ஸ கௌந்தேய: ஸர்வாந் பந்தூநவஸ்திதாந் ॥ 27.

க்ருபயா பரயாவிஷ்டோ விஷீதந்நிதமப்ரவீத் ।
த்ருஷ்ட்வேமம் ஸ்வஜநம் க்ருஷ்ண! யுயுத்ஸும் ஸமுபஸ்திதம் ॥ 28.

---

26-47. யுத்தகளத்தில் வந்துநிற்கும் தார்த்தராஷ்ட்ரர் முதலியவர்களுக்கு உபஸ்திதமாயுள்ள விபத்தை அறிந்து, அர்ஜுநன், ஸ்நேஹத்தாலும் காருண்யத்தாலும் ஆதுலனாய், க்ஷத்ரிய தர்மமாகிற யுத்தத்தை அதர்மமென்று எண்ணிக் கையில் இருந்த வில்லை நழுவவிட்டு ரதத்தின் உத்ஸங்கத்தில் உட்காருகிறான்.

26. ஸகீந் - ஸமாந வயஸ்கரர்களான ஸ்நேஹிதர்கள்.

27. ஸுஹ்ருத: - ஹிதத்தை இச்சிப்பவர்கள். வயஸ்ஸின் விசேஷம் இதில் அபேக்ஷிக்கப்படவில்லை.

ஸ கௌந்தேய: - துர்யோதநனுக்கும் இவனுக்குமுள்ள வாசியை ஸூசிப்பிக்கிறது 'ஸ:' என்னும் பதம்.

ஸர்வாந் பந்தூந் - இவ்விடத்தில் வாராத பந்துக்களில்லை என்பது கருத்து.

28. க்ருபயா பரயாவிஷ்ட: - பரமகாருணிகன்; ஶத்ருக்களுடைய துக்கத்தையும் ஸஹியாதவன்.

𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑌿 𑌮𑌮 𑌗𑌾𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌮𑍁𑌖𑌂 𑌚 𑌪𑌰𑌿𑌶𑍁𑌷𑍍𑌯𑌤𑌿 ।
𑌵𑍇𑌪𑌥𑍁𑌶𑍍𑌚 𑌶𑌰𑍀𑌰𑍇 𑌮𑍇 𑌰𑍋𑌮𑌹𑌰𑍍𑌷𑌶𑍍𑌚 𑌜𑌾𑌯𑌤𑍇 ॥ 29.
𑌗𑌾𑌣𑍍𑌡𑍀𑌵𑌂 𑌸𑍍𑌰𑌂𑌸𑌤𑍇 𑌹𑌸𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌕𑍍𑌚𑍈𑌵 𑌪𑌰𑌿𑌦𑌹𑍍𑌯𑌤𑍇 ।
𑌨 𑌚 𑌶𑌕𑍍𑌨𑍋𑌮𑍍𑌯𑌵𑌸𑍍𑌥𑌾𑌤𑍁𑌂 𑌭𑍍𑌰𑌮𑌤𑍀𑌵 𑌚 𑌮𑍇 𑌮𑌨𑌃 ॥ 30.
𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌿 𑌚 𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌾𑌨𑌿 𑌕𑍇𑌶𑌵 ! ।
𑌨 𑌚 𑌶𑍍𑌰𑍇𑌯𑍋𑌽𑌨𑍁𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑌾𑌹𑌵𑍇 ॥ 31.
𑌨 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑍇 𑌵𑌿𑌜𑌯𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣 ! 𑌨 𑌚 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ।
𑌕𑌿𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑍇𑌨 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦 ! 𑌕𑌿𑌂 𑌭𑍋𑌗𑍈𑌰𑍍𑌜𑍀𑌵𑌿𑌤𑍇𑌨 𑌵𑌾 ॥
𑌯𑍇𑌷𑌾𑌮𑌰𑍍𑌥𑍇 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑌿𑌤𑌂 𑌨𑍋 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌭𑍋𑌗𑌾𑌃 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 ।
𑌤 𑌇𑌮𑍇𑌽𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌯𑍁𑌦𑍍𑌧𑍇 𑌪𑍍𑌰𑌾𑌣𑌾𑌂𑌸𑍍𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌧𑌨𑌾𑌨𑌿 𑌚 ॥ 33.

---

அர்ஜுநனுடைய விஷாதத்திற்கு அவனுடைய காருண்யம் முதலியவை ஹேதுக்கள். இவை ஸாமாந்யமாக நல்ல குணங்களே. ஆனால், யுத்தத்தில் ப்ரவ்ருத்திக்கும் க்ஷத்ரியன் விஷயத்தில் அவை ச்லாக்யங்களல்ல. தர்ம்யமாயும் ப்ராப்தமாயும் இருக்கும் யுத்தத்தைச் செய்வது க்ஷத்ரிய தர்மமே. தவிர, அதைப் பரித்யஜிப்பது க்ஷத்ரிய தர்மமாகாது. தன் தன் வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டிப்பதன்றோ பகவத் ப்ராப்திக்கு ஹேதுவாகும்? ஆகையால்தான், ஸ்ரீ பகவான், அர்ஜுநனுடைய இந்தக் காருண்யத்தைக் கச்மலமென்றும் பார்த்தனாக இருக்கும் அர்ஜுநனுக்கு அநநுரூபமென்றும் அடுத்த அத்யாயத்தில் நிந்திக்கிறார். தர்மத்தில் அதர்ம புத்தியைச் செய்யும் அர்ஜுநனுடைய மோஹத்தை நிவ்ருத்திப்பதே பகவானுடைய முதல் ப்ரயத்நமாகின்றது.

32. 𑌨 𑌕𑌾𑌂𑌕𑍍𑌷𑍇 - இந்த வாக்யத்தால் அர்ஜுநனுடைய மநஸ்வித்வம் ஸூசிதமாகின்றது. பந்துக்களைக் கொன்று அதனால் ஏற்படும் ஜயத்தை விஷமாக நினைக்கிறவன். ஜயம் மிகப் பெரியதாக இருந்தாலும், பந்து நாசத்தால் அது ஏற்படவேண்டியதானால் அது வேண்டாம் என்னும் கம்பீரமான மநஸ்ஸை உடையவன்.

'𑌯𑌦𑍍𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑌾 𑌮𑌿𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌵𑌾 𑌕𑍍𑌷𑌯𑍇 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌨𑌾𑌹𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌤𑌿𑌗𑍃𑌹𑍍𑌣𑍀𑌯𑌾𑌂 𑌭𑌕𑍍𑌷𑍍𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌷𑌕𑍃𑌤𑌾𑌨𑌿𑌵 ॥'

என்று சக்ரவர்த்தித் திருமகனிடத்திலன்றோ அந்த மஹா மநஸ்வித்வத்தை நாம் பார்த்திருக்கிறோம்? அர்ஜுநனிடத்திலும் அது காணப்படுகின்றது.

33. 𑌭𑍋𑌗𑌾𑌃 𑌸𑍁𑌖𑌾𑌨𑌿 𑌚 - போகங்கள் என்பவை ஸுகத்திற்கு ஸாதநங்கள்.

𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌾𑌃 𑌪𑌿𑌤𑌰𑌃 𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 𑌪𑌿𑌤𑌾𑌮𑌹𑌾𑌃 ।
𑌮𑌾𑌤𑍁𑌲𑌾𑌃 𑌶𑍍𑌵𑌶𑍁𑌰𑌾𑌃 𑌪𑍌𑌤𑍍𑌰𑌾𑌃 𑌶𑍍𑌯𑌾𑌲𑌾𑌃 𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌿𑌨𑌸𑍍𑌤𑌥𑌾 ॥
𑌏𑌤𑌾𑌨𑍍𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌮𑌿𑌚𑍍𑌛𑌾𑌮𑌿 𑌘𑍍𑌨𑌤𑍋𑌽𑌪𑌿 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ।
𑌅𑌪𑌿 𑌤𑍍𑌰𑍈𑌲𑍋𑌕𑍍𑌯𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍍𑌯 𑌹𑍇𑌤𑍋𑌃 𑌕𑌿𑌂 𑌨𑍁 𑌮𑌹𑍀𑌕𑍃𑌤𑍇 ॥ 35.
𑌨𑌿𑌹𑌤𑍍𑌯 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌃 𑌕𑌾 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ।
𑌪𑌾𑌪𑌮𑍇𑌵𑌾𑌶𑍍𑌰𑌯𑍇𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌹𑌤𑍍𑌵𑍈𑌤𑌾𑌨𑌾𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃 ॥ 36.

---

35 𑌘𑍍𑌨𑌤𑍋𑌽𑌪𑌿 - என்னை அவர்கள் ஹிம்ஸிக்கையிலும். அர்ஜுநனுடைய பரமதார்மிகத்வம் இதனால் வெளிப்படுகின்றது. 'தன்னைக்கொல்ல ப்ரயத்நப்படுமவர்களைக் கொல்லலாம்' என்னும் அநுஜ்ஞை ஆசார்யாதிகளின் விஷயத்தில் ப்ரவ்ருத்திக்காது என்னும் தர்மத்தை நன்றாக உணர்ந்தவன். தன்னிடத்திலும் த்ரௌபதி முதலிய தன்னுடைய அநுபந்திகளிடத்திலும் துர்யோதநன் செய்திருக்கும் குற்றங்களை நன்றாக உணர்ந்திருக்கையிலும், பந்துக்களெல்லாரையும் கொன்றுவிட்டால் குலக்ஷயம் செய்வதாகிய மஹத்தான அதர்மம் ஸம்பவிக்குமே என்று அதர்மத்திலிருந்து பயந்தவன். நிகழ்காலத்தைக்குறிக்கும் (𑌘𑍍𑌨𑌤𑌃) என்னும் பதம், இன்னமும் துர்யோதநாதிகள் தீங்கு செய்வதிலிருந்து உபரதர்களாகவில்லை என்பதைக் காண்பிக்கின்றது.

36. 𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃 - ஆறு பெயர் ஆததாயிகளென்று ஶாஸ்த்ரம் சொல்லுகின்றது.

'𑌅𑌗𑍍𑌨𑌿𑌦𑍋 𑌗𑌰𑌦𑌶𑍍𑌚𑍈𑌵 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌿𑌰𑍍𑌧𑌨𑌾𑌪𑌹𑌃 ।
𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌦𑌾𑌰𑌾𑌪𑌹𑌾𑌰𑍀 𑌚 𑌷𑌡𑍇𑌤𑍇 𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌃 ॥'

[தீயிடுகிறவன், விஷம் கொடுப்பவன், கையில் ஶஸ்த்ரத்தை வைத்துக்கொண்டு பிறருக்குப் பயத்தை ஜநிப்பிக்கிறவன், தநத்தை அபஹரிக்கிறவன், க்ருஹ ஆராமாதி க்ஷேத்ரங்களை ஆக்ரமிக்கிறவன், தாரசௌர்யம் செய்கிறவன், ஆக அறுவரும் ஆததாயிகள்.] துர்யோதநாதிகளிடத்தில் ஒவ்வொன்றும் பொருந்தும். இவர்களைக் கொல்வதனால் தோஷமில்லை யென்பது,

'𑌆𑌤𑌤𑌾𑌯𑌿𑌨𑌮𑌾𑌯𑌾𑌨𑍍𑌤𑌂 𑌹𑌨𑍍𑌯𑌾𑌦𑍇𑌵𑌾𑌵𑌿𑌚𑌾𑌰𑌯𑌨𑍍 ।
𑌨𑌾𑌤𑌤𑌾𑌯𑌿𑌵𑌧𑍇 𑌦𑍋𑌷𑍋 𑌹𑌨𑍍𑌤𑍁𑌰𑍍𑌭𑌵𑌤𑌿 𑌕𑌶𑍍𑌚𑌨 ॥'

என்னும் மநு வாக்யத்தினால் ஏற்படுகின்றது.

𑌤𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑍍𑌹𑌾 𑌵𑌯𑌂 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾𑌨𑍍 𑌸𑍍𑌵𑌬𑌾𑌨𑍍𑌧𑌵𑌾𑌨𑍍 ।
𑌸𑍍𑌵𑌜𑌨𑌂 𑌹𑌿 𑌕𑌥𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍁𑌖𑌿𑌨𑌃 𑌸𑍍𑌯𑌾𑌮 𑌮𑌾𑌧𑌵 ! ॥ 37.

𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍇𑌤𑍇 𑌨 𑌪𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌲𑍋𑌭𑍋𑌪𑌹𑌤𑌚𑍇𑌤𑌸𑌃 ।
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌮𑌿𑌤𑍍𑌰𑌦𑍍𑌰𑍋𑌹𑍇 𑌚 𑌪𑌾𑌤𑌕𑌮𑍍 ॥ 38.

𑌕𑌥𑌂 𑌨 𑌜𑍍𑌞𑍇𑌯𑌮𑌸𑍍𑌮𑌾𑌭𑌿𑌃 𑌪𑌾𑌪𑌾𑌦𑌸𑍍𑌮𑌾𑌨𑍍𑌨𑌿𑌵𑌰𑍍𑌤𑌿𑌤𑍁𑌮𑍍 ।
𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑌕𑍃𑌤𑌂 𑌦𑍋𑌷𑌂 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌦𑍍𑌭𑌿𑌰𑍍𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ! ॥ 39.

𑌕𑍁𑌲𑌕𑍍𑌷𑌯𑍇 𑌪𑍍𑌰𑌣𑌶𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌸𑌨𑌾𑌤𑌨𑌾𑌃 ।
𑌧𑌰𑍍𑌮𑍇 𑌨𑌷𑍍𑌟𑍇 𑌕𑍁𑌲𑌂 𑌕𑍃𑌤𑍍𑌸𑍍𑌨𑌮𑌧𑌰𑍍𑌮𑍋𑌽𑌭𑌿𑌭𑌵𑌤𑍍𑌯𑍁𑌤 ॥ 40.

𑌅𑌧𑌰𑍍𑌮𑌾𑌭𑌿𑌭𑌵𑌾𑌤𑍍𑌕𑍃𑌷𑍍𑌣 ! 𑌪𑍍𑌰𑌦𑍁𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿 𑌕𑍁𑌲𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌯𑌃 ।
𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌷𑍁 𑌦𑍁𑌷𑍍𑌟𑌾𑌸𑍁 𑌵𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍇𑌯 ! 𑌜𑌾𑌯𑌤𑍇 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌃 ॥ 41.

𑌸𑌂𑌕𑌰𑍋 𑌨𑌰𑌕𑌾𑌯𑍈𑌵 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌲𑌸𑍍𑌯 𑌚 ।
𑌪𑌤𑌨𑍍𑌤𑌿 𑌪𑌿𑌤𑌰𑍋 𑌹𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌲𑍁𑌪𑍍𑌤𑌪𑌿𑌣𑍍𑌡𑍋𑌦𑌕𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ॥ 42.

𑌦𑍋𑌷𑍈𑌰𑍇𑌤𑍈𑌃 𑌕𑍁𑌲𑌘𑍍𑌨𑌾𑌨𑌾𑌂 𑌵𑌰𑍍𑌣𑌸𑌂𑌕𑌰𑌕𑌾𑌰𑌕𑍈𑌃 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍇 𑌜𑌾𑌤𑌿𑌧𑌰𑍍𑌮𑌾𑌃 𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌶𑍍𑌚 𑌶𑌾𑌶𑍍𑌵𑌤𑌾𑌃 ॥ 43.

𑌉𑌤𑍍𑌸𑌨𑍍𑌨𑌕𑍁𑌲𑌧𑌰𑍍𑌮𑌾𑌣𑌾𑌂 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌂 𑌜𑌨𑌾𑌰𑍍𑌦𑌨 ! ।
𑌨𑌰𑌕𑍇 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌵𑌾𑌸𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌨𑍁𑌶𑍁𑌶𑍍𑌰𑍁𑌮 ॥ 44.

𑌅𑌹𑍋 ! 𑌬𑌤 ! 𑌮𑌹𑌤𑍍𑌪𑌾𑌪𑌂 𑌕𑌰𑍍𑌤𑍁𑌂 𑌵𑍍𑌯𑌵𑌸𑌿𑌤𑌾 𑌵𑌯𑌮𑍍 ।
𑌯𑌦𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌸𑍁𑌖𑌲𑍋𑌭𑍇𑌨 𑌹𑌨𑍍𑌤𑍁𑌂 𑌸𑍍𑌵𑌜𑌨𑌮𑍁𑌦𑍍𑌯𑌤𑌾𑌃 ॥ 45.

---

37. வயம் - நாங்கள். இந்தப் பஹுவசநமும், இன்னும் மற்றை ஸ்லோகங்களில் வரும் பஹுவசநமும், அர்ஜுநனைப்போல அவனுடைய ப்ராதாக்களும் பரம தார்மிகர்கள் என்பதைக் குறிக்கின்றன.

40. அபிபவதி - இது, மாநஸிகதோஷத்தைக் குறிக்கின்றது.

41. ப்ரதுஷ்யந்தி - இது, காயிக தோஷத்தைக் குறிக்கின்றது.

𑌯𑌦𑌿 𑌮𑌾𑌮𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌰 𑌮𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌶𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌾𑌣𑌯𑌃 ।
𑌧𑌾𑌰𑍍𑌤𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌾 𑌰𑌣𑍇 𑌹𑌨𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑌨𑍍𑌮𑍇 𑌕𑍍𑌷𑍇𑌮𑌤𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ 46.

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌜𑍁𑌨 𑌸𑍍𑌸𑌂𑌖𑍍𑌯𑍇 𑌰𑌥𑍋𑌪𑌸𑍍𑌥 𑌉𑌪𑌾𑌵𑌿𑌶𑌤𑍍 ।
𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌸𑌶𑌰𑌂 𑌚𑌾𑌪𑌂 𑌶𑍋𑌕𑌸𑌂𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌾𑌨𑌸𑌃 ॥ 47.

𑌇𑌤𑌿 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾𑌸𑍂𑌪𑌨𑌿𑌷𑌤𑍍𑌸𑍁 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑌾𑌂
𑌯𑍋𑌗𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌰𑍍𑌜𑍁𑌨𑌸𑌂𑌵𑌾𑌦𑍇
𑌅𑌰𑍍𑌜𑍁𑌨𑌵𑌿𑌷𑌾𑌦𑌯𑍋𑌗𑍋 𑌨𑌾𑌮
𑌪𑍍𑌰𑌥𑌮𑍋𑌽𑌧𑍍𑌯𑌾𑌯𑌃

---

46. 𑌯𑌦𑌿 𑌮𑌾𑌮 𑌪𑍍𑌰𑌤𑍀𑌕𑌾𑌰𑌂. 'ஒரு ப்ரகாரத்தாலும் நான் அவர்களைக் கொல்ல மாட்டேன்' என்னும் அர்ஜுநனுடைய உறுதி, இந்த ஶ்லோகத்தினல் ஏற்படுகின்றது. 'துர்யோதநாதிகள் ஆததாயிகள் என்பதும், இப்பொழுதும் அவர்கள் ஹிம்ஸிக்க ப்ரயத்நப்படுகிறுர்கள் என்பதும், யுத்தத்திலிருந்து நிவ்ருத்திப்பது அகீர்த்திகர மென்பதும், யுத்தம் செய்வது பெருத்த விஜயத்திற்கு ஹேது வென்பதும், ஸர்வேஶ்வரேஶ்வரனுகிற நீ உபதேஶிப்பது அத்யந்தம் ஹிததமமே என்பதும், ஆக இவையெல்லாம் உண்மையாக இருந்தாலும், ஒரு ப்ரகாரத்தாலும் நான் யுத்தம் செய்ய மாட்டேன்' என்பது தாத்பர்யம்.

47. 𑌶𑍋𑌕𑌸𑌂𑌵𑌿𑌗𑍍𑌨𑌮𑌾𑌨𑌸𑌃 - அர்ஜுநனுடைய யுத்த அத்யவஸாயம் ஶோகத்தினல் சலிதமாகிவிட்டது என்பது கருத்து. பரமபுருஷனுடைய ஸஹாயம் தனக்கு இருக்கிறபடியால் ஶத்ரு விநாஶம் ஸித்தம் என்று அர்ஜுநன் உணர்ந்து ஶோகப்படுகிறுன். 'கணக்கற்ற ஸைந்யத்தின் ஸஹாயத்தைவிட நிராயுதனுக இருந்தாலும் பரம புருஷனுகிற கண்ணனுடைய ஸாந்நித்யமே மிகச்சிறந்தது, அதுவே விஜயத்திற்கு ஹேது' என்று பூர்வமே அர்ஜுநன் நன்றுக அறிந்தன்றோ அவனுடைய ஸஹாயத்தை வரித்தது?

𑌰𑌥𑍋𑌪𑌸𑍍𑌥𑍇 - ரதத்தின் உத்ஸங்கத்தில். அது யுத்தோத்யுக்தனை ரதீ இருக்கவேண்டும் ஸ்தாநமன்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ பகவத்கீதா

த்விதீயோऽத்யாய:

ஸஞ்ஜய உவாச—

தம் ததா க்ருபயாவிஷ்டம் அஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் ।
விஷீதந்தமிதம் வாக்யமுவாச மதுஸூதந: । 1.

---

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

## அத்யாய ஸங்கதி.

முதல் அத்யாயம், அத்யாத்ம ஶாஸ்த்ரத்தை அவதரிப்பிக்கும் பொருட்டு அதற்கு உபோத்காதமாயுள்ள கதா ஸந்தர்ப்பத்தைச் சொல்லிற்று. இரண்டாவது அத்யாயத்தில் ஶாஸ்த்ரார்த்தம் ஆரம்பிக்கிறபடியால், அந்த ஶாஸ்த்ரார்த்தத்தை, ஸ்ரீ பகவான், எவ்வாறு உபக்ரமித்து எவ்விதம் உபஸம்ஹரிக்கிறார் என்பதை இவ்விடத்தில் சற்றுக் கவனிக்கவேண்டும்.

“ ஸ்வதர்மஜ்ஞாந வைராக்ய ஸாத்ய பக்த்யேக கோசர: ।
நாராயண: பரம் ப்ரஹ்ம கீதாஶாஸ்த்ரே ஸமீரித: ॥ ”

என்பது, ஸ்ரீ ஆளவந்தாருடைய ஸங்க்ரஹ ஶ்லோகம். இதன் தாத்பர்யமென்னவென்றால்—‘இந்தக் கீதா ஶாஸ்த்ரத்தில் ஸாக்ஷாத் பரம்ப்ரஹ்மமாகிற நாராயணனே ப்ரதிபாதிக்கப்படுகிறான்; அவனை அடையும் உபாயமும் அவனிடத்திற் செய்யப்படும் பக்தி ஒன்றே; அந்தப் பக்தியும், தம் தம் வர்ணாஶ்ரமங்களுக்குரிய தர்மாநுஷ்டாநத்தினாலும், ஈஶ்வரனுக்கு ஶேஷமாயிருக்கும் ஜீவாத்மாவினுடைய ஸ்வரூப ஜ்ஞாநத்தாலும், பரமாத்மாவைத் தவிர்த்து மற்றை விஷயங்களிற் செய்யப்படும் வைராக்யத்தாலும் ஸாதிக்கத்தகுந்தது’ என்பதுதான்.

அதாவது - ‘சித், அசித், ஈஶ்வரன் என்று தத்வங்கள் மூன்று. அவைகளுள் ஈஶ்வரன் என்பது பரதத்வம், சித் என்பது அவர தத்வம்; இவை

இரண்டும் சேதந தத்வங்கள் : அசித் என்பது அசேதந தத்வம். அவரதத்வ மாகிற ஜீவனுக்குப் பரமப்ராப்யன் ஈஸ்வரன். அவனை அடையும்பொருட்டு ஒவ்வொரு ஜீவாத்மாவும், அசேதந தத்வமாகிற ப்ரக்ருதியின் விகாரங்களா யுள்ள விஷயங்களில் வைராக்யமுள்ளவனாய், தன் தன் தர்மங்களைக் குறை வின்றிக்கே அநுஷ்டித்து, தனது சேஷத்வரூபமான ஸ்வரூபத்தை நன்றாக உணர்ந்து, அதனால் ஸித்திக்கும் பக்தியைக்கொண்டே ஈஸ்வரனை அடைய வேண்டும்' என்று சொன்னதாயிற்று.

முதல் ஆறு அத்யாயங்களில், அவர தத்வமாகிற ஜீவாத்மாவினுடைய ஸ்வரூபமும், அவன் அநுஷ்டிக்கவேண்டிய நிஷ்டைகளும் விசாரிக்கப்படு கின்றன. இந்த நிஷ்டைகள் ஸாக்ஷாத்தாகப் பகவத்ப்ராப்திக்கு உபாய மல்ல ; ஆனால் பரம்பரையாக அதற்கு ஸாதநங்கள்.

இரண்டாவது ஆறு அத்யாயங்களில், ஸாக்ஷாத்தாகப் பகவத்ப்ராப் திக்கு ஸாதநமான பக்தி விசாரிக்கப்படுகின்றது. இந்தப் பக்தி கீழ்ச்சொல் லப்பட்டுள்ள நிஷ்டைகளாலே ஸாத்யமானது. ஆகையால், அந்த நிஷ்டை களை வ்யவஹிதோபாயமென்றும், பக்தியை அவ்யவஹிதோபாய மென்றும் பெரியோர்கள் வ்யவஹரிக்கிறார்கள்.

மூன்றாவது ஆறு அத்யாயங்களில், முதல் இரண்டு ஷட்கங்களிற் சொல்லப்பட்டுள்ள தத்வங்களும் ஹிதமும் சோதிக்கப்படுகின்றன. அவை களுள் முதல் மூன்று அத்யாயங்கள் தத்வசோதநத்தையும், இரண்டாவது மூன்று அத்யாயங்கள் அநுஷ்டாநசோதநத்தையும் செய்கின்றன வென்றும் சொல்லலாம். ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனுடைய ஸங்க்ரஹ ரக்ஷையில், இந்த அர்த்தத்தை விவரிக்கும் வாக்யங்கள் காணப்படுகின்றன :—

"𑌪𑍍𑌰𑌥𑌮𑌷𑌟𑍍𑌕𑌂 𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑍋𑌪𑌾𑌯𑌪𑌰𑌂 ;
𑌦𑍍𑌵𑌿𑌤𑍀𑌯𑌷𑌟𑍍𑌕𑌂 𑌪𑌰𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌾𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑍋𑌪𑌾𑌯𑌪𑌰𑌂 ; 𑌤𑍃𑌤𑍀
𑌯𑌷𑌟𑍍𑌕𑌂 𑌷𑌟𑍍𑌕𑌦𑍍𑌵𑌯𑍋𑌕𑍍𑌤𑌸𑌕𑌲𑌵𑌿𑌷𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌹𑌿𑌤𑌵𑌿𑌶𑍋𑌧𑌨𑌪𑌰𑌂"

## முதல் ஷட்கம்.

இந்த ஷட்கத்திற் சொல்லப்படும் நிஷ்டைகள் என்னவென்றால் :— கர்ம நிஷ்டை ஜ்ஞாந நிஷ்டை என்று இரண்டு நிஷ்டைகள்தாம். இவைக ளால் ஸாதிக்கப்படுவது ஆத்மாவலோகநமென்று சொல்லப்படும் யோகம். இந்த யோகம் ஸாக்ஷாத்தாகக் கர்ம நிஷ்டையாலேயே ஸாத்யமென்பது ஒருபடி ; கர்மநிஷ்டையால் ஸாத்யம் ஜ்ஞாநநிஷ்டை, அதனால் ஸாத்யம் யோகம் என்பது மற்றோர்படி. இந்த யோகத்தினால் ஸாதிக்கத்தகுந்தது ஆத்மாநுபவம். இவையெல்லாம் இங்கு ப்ரதிபாதிக்கப்படுகின்றன. இவை களின் அநுஷ்டாநம் தான் '𑌸𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌷𑌯𑌵𑍍𑌯𑌵𑌹𑌿𑌤𑍋𑌪𑌾𑌯𑌂' என்று சொல்லப்படுகின்றது.

" ஜ்ஞாநகர்மாத்மிகே நிஷ்டே யோகலக்ஷ்யே ஸுஸம்ஸ்க்ருதே ।
ஆத்மாநுபூதிஸித்த்யர்த்தே பூர்வஷட்கேந சோதிதே ॥"

என்பது ஸங்க்ரஹ ஶ்லோகம்.

இந்த ஆறு அத்யாயங்களுள் முதல் அத்யாயமும் இரண்டாவது அத்யாயத்தில் ஒரு அம்ஶமும் கேவலம் உபோத்காதம். இரண்டாவது அத்யாயத்தின் மற்றோர் அம்ஶத்தில்தான் ஶாஸ்த்ரார்த்தம் ஆரம்பிக்கப்படுகின்றது. 'தேஹம்போலன்றிக்கே, ஆத்மா என்பது நித்யமான வஸ்து; அப்படி அது நித்யமென்னும் யாதாத்ம்ய ஜ்ஞாநத்தை மறவாமல், மோக்ஷத்தை அபேக்ஷிக்கும் ஒவ்வொருவரும், பலம் முதலியவைகளில் ஆசை வைக்காமலே சிற்சில நியமங்களுடன் தன் தன் கர்மத்தைச் செய்யவேண்டும். இதுதான் கர்மநிஷ்டை. இதனைச்செய்தால் ஜ்ஞாநநிஷ்டை ஸித்திக்கும். அதன் பலம்தான், ஆத்மாவின் தர்ஶநமென்னும் யோகம்' என்பது இரண்டாவது அத்யாயத்தின் பொருள்.

" நித்யாத்மாஸங்ககர்மேஹாகோசரா ஸாங்க்யயோகதீ: ।
த்விதீயே ஸ்திததீலக்ஷா ப்ரோக்தா தந்மோஹஶாந்தயே ॥"

என்பது, இந்த அத்யாயத்தின் ஸங்க்ரஹம். அத்யாயத்தின் விபாகமாவது -

1 - 9. உபோத்காதத்தின் தொடர்ச்சி.

10 - 11. ஶாஸ்த்ரத்தின் அவதாரம்.

12 - 38. ஆத்ம யாதாத்ம்ய ஜ்ஞாநோபதேஶம்.

39 - 53. அந்த யாதாத்ம்ய ஜ்ஞாநத்துடன் செய்யப்படும் அஸங்க கர்மாநுஷ்டாநமாகிற கர்மநிஷ்டையின் உபதேஶம்.

54 - 63. அப்படிப்பட்ட கர்மநிஷ்டையின் பலமாக ஜ்ஞாந நிஷ்டை சொல்லப்படுகின்றது.

69 - 72. அதன் ஸித்தி ஆத்ம தர்ஶந மென்று குறிக்கப்படுகின்றது.

1 - 9. கீழ்ச் சொல்லப்பட்ட அர்ஜுந விஷாதமே மறுபடியும் ஸவிஶேஷமாக ஸங்க்ரஹிக்கப்படுகின்றது. ஸ்வபாவத்தினால் தீரனாக இருக்கையிலும் கார்ப்பண்ய தோஷத்தால் ஸ்வபாவம் மாறினவனாய், அர்ஜுநன், ஶ்ரேய்ஸ்கரமான மார்க்கத்தைத் தெரிந்துகொள்ள இச்சையுடன், ஸ்ரீ க்ருஷ்ணனிடத்தில் ஶரணவரணம் செய்கிறன்.

தம் ததா க்ருபயாவிஷ்டம் - கீழ்ச்சொல்லியபடி க்ருபையினால் ஆவிஷ்டனாய்; அஸ்தாநத்தில் க்ருபை கூர்ந்தவனாய். அதாவது - யுத்தத்

ஸ்ரீ பகவாநுவாச —

" குதஸ்த்வா கஶ்மலமிதம் விஷமே ஸமுபஸ்திதம் |
அநார்யஜுஷ்டம் அஸ்வர்க்யம் அகீர்த்திகரம் அர்ஜுந! || 2.

---

திற்காக வந்திருக்கும் படர்களிடம் அர்ஜுநன் பாராட்டும் ஸ்நேஹம் காருண்யம் முதலியவை அஸ்தாநத்தில் செய்யப்படுகின்றன என்பது தாத்பர்யம். க்ஷத்ரியனுகிற அர்ஜுநன், காருண்யாதிகளால் யுத்தம் செய்யாமல் திரும்புவது அதர்மம் என்பது குறிப்பு. 'க்ருபை' என்னும் பதம் இவ்விடத்தில் ஆந்தரமான விஷாதத்தைக் குறிக்கின்றது.

அஶ்ருபூர்ணாகுலேக்ஷணம் - கண்ணீரால் நிறைந்தும் அதனுல் ஆகுலமாயு மிருக்கிற பார்வையை உடையவும். இது பாஹ்யமான விஷாதத்தைக் குறிக்கின்றது.

மதுஸூதந: - மது என்னும் அஸுரனை ஸம்ஹரித்த பகவான். மதுவை ஸம்ஹரித்தது போல அர்ஜுநனுடைய விஷாதத்திற்கு மூலமாக இருக்கும் ரஜஸ் தமோ குணங்களைப் போக்கடிக்கும் ஶக்தியை உடையவன் என்பது குறிப்பு.

2. கஶ்மலம் - 'ஶோகஸம்விக்நமாநஸ:' என்று ஏற்கெனவே சொல்லியிருக்கிறபடி மூர்ச்சைக்குத் துல்யமான ஶோக அவஸ்தை இந்தப் பதத்தால் குறிக்கப்படுகின்றது.

விஷமே - ஸமமில்லாத காலத்தில். அதாவது " ஶோகத்திற்குத் தகுந்த ஸ்தாநமொன்றுமில்லை என்பது கருத்து.

அநார்யஜுஷ்டம் - 'அநார்யா:' என்பதற்கு; 'அவித்வான்கள்' 'தத்வஜ்ஞாநமில்லாதவர்கள்' என்று அர்த்தம். (அதத்வஜ்ஞா:). ஆராத் (தூராத்) யாதா (புத்தி:) யேஷாம் தே ஆர்யா: [அதத்வங்களிடமிருந்து தூரத்தில் விலகி யிருக்கும் புத்தியை உடையவர்கள் 'ஆர்யர்கள்'] என்று வ்யுத்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. அதாவது - தத்வஜ்ஞாநமுள்ளவர்கள் என்று அர்த்தம். அப்படிக்கல்லாதவர்கள் 'அநார்யர்கள்'.

அஸ்வர்க்யம் - பரலோகத்திற்கு விரோதியாயும். 'ஸ்வர்க்க' என்னும் பதம், இந்த்ர லோகம் முதலியவற்றை ஸாமாந்யமாகக் குறிக்கும்; இவ்விடத்தில் பரலோகத்தைக் குறிக்கின்றது.

𑌕𑍍𑌲𑍈𑌬𑍍𑌯𑌂 𑌮𑌾 𑌸𑍍𑌮 𑌗𑌮𑌃 𑌪𑌾𑌰𑍍𑌥 ! 𑌨𑍈𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌯𑍍𑌯𑍁𑌪𑌪𑌦𑍍𑌯𑌤𑍇 ।
𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑍋𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ! ॥” 3.

𑌅𑌰𑍍𑌜𑍁𑌨 𑌉𑌵𑌾𑌚—

“ 𑌕𑌥𑌂 𑌭𑍀𑌷𑍍𑌮𑌮𑌹𑌂 𑌸𑌂𑌖𑍍𑌯𑍇 𑌦𑍍𑌰𑍋𑌣𑌂 𑌚 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨 ! ।
𑌇𑌷𑍁𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑌾𑌵𑌰𑌿𑌸𑍂𑌦𑌨 ! ॥ 4.

𑌗𑍁𑌰𑍂𑌨𑌹𑌤𑍍𑌵𑌾 𑌹𑌿 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌨𑍍
𑌶𑍍𑌰𑍇𑌯𑍋 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌭𑍈𑌕𑍍𑌷𑌮𑌪𑍀𑌹 𑌲𑍋𑌕𑍇 ।
𑌹𑌤𑍍𑌵𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌗𑍁𑌰𑍂𑌨𑌿𑌹𑍈𑌵
𑌭𑍁𑌞𑍍𑌜𑍀𑌯 𑌭𑍋𑌗𑌾𑌨𑍍 𑌰𑍁𑌧𑌿𑌰𑌪𑍍𑌰𑌦𑌿𑌗𑍍𑌧𑌾𑌨𑍍 ॥ 5.

---

3. உத்தரார்த்தத்தின் அந்வயம்— ‘𑌕𑍍𑌷𑍁𑌦𑍍𑌰𑌂 𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌕𑍃𑌤𑌂 𑌮𑍋𑌹𑌂 𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑍍𑌵𑌾, 𑌹𑍇 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ! 𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠’. ‘𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌂’ என்பதற்கு - ‘𑌹𑍃𑌦𑌯𑌦𑍌𑌰𑍍𑌬𑌲𑍍𑌯𑌕𑍃𑌤𑌂’ (ஹ்ருதயத்தின் பலக்குறைவினால் ஜநித்திருக்கும்) என்பது அர்த்தம். இம்மாதிரி, கார்யத்தில் காரணோபசாரம் செய்வது மஹாகவிகள் ஸம்மதமே.

𑌪𑌰𑌨𑍍𑌤𑌪 ! 𑌉𑌤𑍍𑌤𑌿𑌷𑍍𑌠 - யுத்தத்திற்கு எழுந்திரு. ‘ஶத்ருக்களைத் தபிப்பிக்கும் யோக்யதை யுள்ள நீ ஶோகத்திற்குப் பாத்ரமாகலாமோ?’ என்னும் ஆஶ்சர்யம் இதனால் த்யோதிப்பிக்கப்படுகின்றது.

4. 𑌪𑍂𑌜𑌾𑌰𑍍𑌹𑍌 𑌭𑍀𑌷𑍍𑌮𑌂 𑌦𑍍𑌰𑍋𑌣𑌂 𑌚 𑌕𑌥𑌮𑌿𑌷𑍁𑌭𑌿𑌃 𑌪𑍍𑌰𑌤𑌿𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯𑌾𑌮𑌿 ? - ‘பிதாமஹனாயிருக்கும் பீஷ்மரையும், தநுர்வேதாசார்யராயிருக்கும் த்ரோணரையும் புஷ்பம் நான் எடுத்தல்லவோ பூஜை செய்யவேணும்? அது செய்யாமலிருப்பதே ஸாஹஸம்; அதனுடன் நிற்காமல், அவர்கள்மீது பாணங்களையும் எறிந்து அவர்களைக் கொல்வதான அதிஸாஹஸத்தை மஹா வம்ஶ ப்ரஸூதனான நான் எப்படி செய்வேன்? உமது ஆசார்யனாகிற ஸாந்தீபினியை நீர் கொல்லத்துணிவீரோ?’ என்பது த்யோதிப்பிக்கப்படுகின்றது.

5. பூர்வார்த்தத்தின் அர்த்தமாவது - 𑌮𑌹𑌾𑌨𑍁𑌭𑌾𑌵𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍂𑌨𑌹𑌤𑍍𑌵𑌾 𑌇𑌹 𑌲𑍋𑌕𑍇 𑌭𑍈𑌕𑍍𑌷𑌮𑌪𑌿 𑌭𑍋𑌕𑍍𑌤𑍁𑌂 𑌶𑍍𑌰𑍇𑌯𑌃 - ‘பீஷ்மாதிகளோ மஹாப்ரபாவ ஶாலிகள்; ஸர்வ ப்ரகாரத்தாலும் நம்மால் பஹுமாநிக்கத் தகுந்தவர்கள்; அவர்களைக் கொல்வதனால் ஏற்படும் பாரலௌகிகதுக்கம் பெரி

ந சைதத்வித்ம: கதரந்நோ கரீயோ
யத்வா ஜயேம யதி வா நோ ஜயேயு: ।
யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாம: -
தேऽவஸ்திதா: ப்ரமுகே தார்தராஷ்ட்ரா: ॥ 6.

---

தானதால், அவர்களைக்கொன்று அதனால் அடையக்கூடிய போகங்களை அநுபவிப்பதைக் காட்டிலும் பிச்சை யெடுத்து ஜீவிப்பது மிகச் சிறந்த தன்றோ?' குருவதத்தால் ஜநிக்கும் பாரலௌகிக துக்கம் இந்த அர்த்தத்தில் சொல்லப்படுகிறது.

உத்தரார்த்தம் - 'பாரலௌகிக துக்கம் இருக்கட்டும்; இந்த லோகத்திலும் ஒரு ஸுகமும் அவர்களைக் கொல்வதால் தென்படவில்லை. நிஷ்காமர்களாயுள்ள ஜநங்களின் போகங்களை அபஹரித்தாலும் அபஹரிக்கலாம்; பசித்திருப்பவனது அந்நத்தை அபஹரிப்பது போல ஸகாமர்களுடைய போகங்களை அபஹரிப்பது எவ்விதத்தில் ஸஹ்யமாகும்? அப்படியே அபஹரித்தாலும், அந்தப் போகங்களை அநுபவிக்கும் பொழுதெல்லாம் அவர்களுடைய ஸ்ம்ருதி ஜநித்து அந்த அநுபவத்தின் ருசியைக் கெடுக்காதோ?' 4-வது ஸ்லோகத்திலுள்ள 'பைக்ஷ்யம்' என்பதை அநுஷங்கம்செய்து, 'பைக்ஷ்யம் புஞ்ஜீய' என்று அந்வயம் செய்து கொள்ளவேண்டும்.

அர்த்தகாமாந் - அர்த்தேஷு காமோ யேஷாம்; 'அர்த்தா:' - போகங்கள். 'காம:' - அதி மாத்ரமான ஆசை. போகங்களில் மிருந்த ஆஸக்தியை உடைய; அதாவது - ஸகாமர்கள் என்பது தாத்பர்யம்.

ருதிரப்ரதிக்தாந் - 'அவர்களுடைய ரக்தத்தால் பூசப்பட்ட. அதாவது - அந்தப் போகங்களை அநுபவிக்கும் பொழுதெல்லாம் அவர்களுடைய நினைவு ஜநிக்கும்; அந்த நினைவுடன் அவைகளை அநுபவிப்பது, அத்யந்தம் ஜுகுப்ஸாவஹம் என்பது குறிப்பு. 'அந்த ரக்தத்தை உபஸேசநமாகச் செய்துகொண்டு' என்பது, ஸ்ரீ பாஷ்யகாரருடைய விவரணம். ஸ்வயமே புஜிக்கத்தகுந்ததாயும் மற்றவைகளைப் புஜிப்பிக்க யோக்யமாயும் இருப்பது உபஸேசநம். அவ்விரண்டு யோக்யதையும் இதனிடத்தில் இல்லை என்பது திருவுள்ளம்.

இஹைவ - இங்கேயே. அவர்கள் அநுபவித்த இடத்திலேயே. 'அவர்களுடைய ஆஸநங்களிலேயே உட்கார்ந்து' என்பது ஸ்ரீ பாஷ்யகாரருடைய திவ்யஸூக்தி.

கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ:
ப்ருச்சாமி த்வாம் தர்மஸம்மூடசேதா: ।
யச்ச்ரேய: ஸ்யாந்நிச்சிதம் ப்ரூஹி தந்மே
சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம் ॥ 7.

---

6. அர்ஜுநன் ஸ்வபாவத்தினால் தீரன்; ஆனால், இப்பொழுது இன்னது செய்கிறது என்று தெரியாமல் 'கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ:' என்கிறபடி கார்ப்பண்யத்தை அடைந்து அதனால் அதீரனாக இருக்கிறான். ஆரம்பித்த யுத்தத்தை நடத்தி வெற்றிபெற யத்நித்தால், பந்துவதரூபமான பாபம் ஸம்பவிக்கிறது; யுத்தம் செய்யாமல் நின்றால், சத்ருக்களால் அடிபட்டு இன்னும் ஸமீபித்த பந்துக்களாயுள்ள தர்மபுத்ராதிகளின் விநாசம் ஸம்பவிக்கும்; இப்படி இரண்டுவிதத்திலுமுள்ள பாதகம்தான் அர்ஜுநனுடைய கார்ப்பண்யத்தின் ஹேது. 'யத்வா (வயம் சத்ரூந்) ஜயேம, யதி வா (சத்ரவ:) நோ ஜயேயு: இதயோ: கதரத் ந: கரீய: இதி ந வித்ம:' என்பது அந்வயம். 'யத்வா' 'யதி வா' இரண்டும் ஒரே அர்த்தமுள்ளவை.

இப்படி மோஹத்தை அடைந்திருக்கையிலும், சத்ருக்களை அடிப்பதைவிட அவர்களால் அடிக்கப்படுவதே சிறந்தது என்று அந்த:கரணத்தில் ஒரு தோற்றம் அர்ஜுநனுக்கு உண்டு. உத்தரார்த்தத்திலுள்ள 'யாநேவ ஹத்வா ந ஜிஜீவிஷாம:' - யேஷாம் வதே ந ஜீவநமாகாங்க்ஷாம:' (எவர்களைக் கொன்று அதனால் ஜீவநத்தை அடைய நமக்கு இஷ்டமில்லையோ) என்னும் வாக்யம் அந்தத் தோற்றத்தை ஸூசிப்பிக்கின்றது.

7. கார்பண்யதோஷோபஹதஸ்வபாவ: - கார்ப்பண்யமாகிற தோஷத்தினால் கெடுக்கப்பட்டிருக்கும் ஸ்வபாவத்தை யுடைய. இன்னது கர்த்தவ்ய மென்பதை அறியாததே இந்தக் கார்ப்பண்யத்திற்கு ஹேது.

'யத் ச்ரேய: இதி நிச்சிதம், தத் மே ப்ரூஹி' என்பது அந்வயம்.

'அஹம் சிஷ்ய:, த்வாம் சாதி' - நான் சிஷ்யன்; இன்னது செய்யப்பட வேண்டும் என்பதை எனக்குக் கட்டளை இடு. சாஸநீயா

𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿 𑌮𑌮𑌾𑌪𑌨𑍁𑌦𑍍𑌯𑌾𑌦𑍍 -
𑌯𑌚𑍍𑌛𑍋𑌕 𑌮𑍁𑌚𑍍𑌛𑍋𑌷𑌣 𑌮𑌿𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌮𑍍 ।
𑌅𑌵𑌾𑌪𑍍𑌯 𑌭𑍂𑌮𑌾𑌵𑌸𑌪𑌤𑍍𑌨 𑌮𑍃𑌦𑍍𑌧𑌂
𑌰𑌾𑌜𑍍𑌯𑌂 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌪𑌿 𑌚𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌮𑍍 ॥ ” 8.

𑌸𑌂𑌜𑌯 𑌉𑌵𑌾𑌚—

𑌏𑌵𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌂 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶𑌃 𑌪𑌰𑌨𑍍𑌤𑌪𑌃 ।
“ 𑌨𑌯𑍋𑌤𑍍𑌸𑍍𑌯 ” 𑌇𑌤𑌿 𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑍁𑌕𑍍𑌤𑍍𑌵𑌾 𑌤𑍂𑌷𑍍𑌣𑍀𑌂 𑌬𑌭𑍂𑌵 𑌹 ॥

---

𑌹𑌿 𑌶𑌿𑌷𑍍𑌯𑌃 – (எவனைப் பார்த்து, கட்டளை யிடலாமோ அவன் ஶிஷ்யன்). ஆகையினால்தான் ‘𑌶𑌾𑌧𑌿’ என்னும் பத ப்ரயோகம்.

‘𑌪𑍍𑌰𑌪𑌨𑍍𑌨𑌂’ - பகவானுடைய பாதாரவிந்தங்களை அடைந்திருக்கும். இது ஶிஷ்ய குண ஸம்பத்தியைக் காண்பிக்கிறது.

8. 𑌭𑍂𑌮𑌾𑌵𑌸𑌪𑌤𑍍𑌨 𑌮𑍃𑌦𑍍𑌧𑌂 𑌰𑌾𑌜𑍍𑌯𑌂, 𑌸𑍁𑌰𑌾𑌣𑌾𑌮𑌾𑌧𑌿𑌪𑌤𑍍𑌯𑌂 𑌚 𑌅𑌵𑌾𑌪𑍍𑌯𑌾𑌪𑌿, 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾 𑌮𑍁𑌚𑍍𑌛𑍋𑌷𑌣𑌂 𑌮𑌮 𑌶𑍋𑌕𑌂 𑌯𑌦𑌪𑌨𑍁𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌨𑍍𑌨 𑌹𑌿 𑌪𑍍𑌰𑌪𑌶𑍍𑌯𑌾𑌮𑌿’ என்பது அன்வயம். ‘ஶோகமோ அதி தீவ்ரமாக இருக்கிறது; அதைப் போக்கும் உபாயமோ தெரியவில்லை; என் செய்வேன்?’ என்று வருந்துகிறான். “அகண்ட பூமண்டலாதிபத்யமும் தேவேந்த்ர பதவியும் இன்னும் மற்றை எவ்வித ஐஶ்வர்யமும் இந்த ஶோகத்தை நிவ்ருத்திக்க அஸமர்த்தங்கள்”. என்பது கருத்து. உண்மையாகவே இம்மாதிரியான மோஹத்தை நிவ்ருத்திப்பிக்க ஸாக்ஷாத் கோவிந்தனுடைய உபதேஶம் தவிர மற்ற எதுதான் ஸமர்த்தமாகும்?

9. 𑌹𑍃𑌷𑍀𑌕𑍇𑌶𑌮𑍍 - ‘இந்த்ரியங்களை ப்ரேரிப்பிக்கும் ஈஶனே இந்த வ்யாபாரத்தில் ஸமர்த்தனாவான்’ என்பதை இந்தப் பதம் ஸூசிப்பிக்கின்றது.

𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑌮𑍍 - ‘வாக்கை உடையவன்’; அதாவது - அர்ஜுனனுடைய ஶோகத்தை நிவ்ருத்திப்பிக்க ஸமர்த்தமான வாக்கை யுடையவன் என்பது தாத்பர்யம். பூபார நிவ்ருத்திக்காகத் திருவவதரித்தவன் என்றும் அர்த்தம் சொல்லலாம்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

# வேதாந்த ஸங்க்ரஹம்.

நம் ஸித்தாந்தப்படி ஒருவன் அறியவேண்டியவை ஐந்து விஷயங்கள். அவை அர்த்தபஞ்சக மெனப்படும். அவையாவன:—1. ப்ரஸ்வரூபம் (பகவத் ஸ்வரூபம்), 2. ஜீவஸ்வரூபம், 3. விரோதியாகிற ப்ரக்ருதியின் ஸ்வரூபம், 4. மோக்ஷத்தை அடைவிக்கும் வழி, காரணம் (உபாயம்) 5. மோக்ஷ ஸ்வரூபம் (உபேயம்) என்பன. இதுவரையில் பகவத் ஸ்வரூபத்தையும், பிறகு ப்ரக்ருதியின் ஸ்வரூபத்தையும், ஜீவ ஸ்வரூபத்தையும் விவரித்தோம். பகவத் ஸ்வரூபத்தையும் குணத்தையும் இதுவரையில் அநேகவிதமாய் ஸூத்ர வரிசை க்ரமத்தில் விவரித்திருந்தபோதிலும், எல்லாவற்றையும் சேர்த்துச் சுருக்கமாய் இங்கு சொல்வோம். ஒருவேளை முன் குறிக்கப்பட்ட ப்ரமாணங்களிலும் விஷயங்களிலும் சிலவற்றை மறுபடியும் சொல்லும்படி நேரிட்டாலும், விஷயம் ஒரே இடத்தில் சுருக்கமாயும் தெளிவாயும் இருக்கும்பொருட்டே பரஸ்வரூபத்தைப்பற்றி இங்கு சொல்லுகிறோம்.

ஈஸ்வரன் அகிலஹேய ப்ரத்யநீக அநந்தஜ்ஞாந ஆநந்த ஏக ஸ்வரூபன்; அதாவது, ஸகல தோஷங்கள் தீமைகள் முதலிய எல்லாவற்றிற்கும், இருளுக்கு ப்ரகாசம்போல் எதிர்த் தட்டாயிருக்கிறான். அசித் மாறிக்கொண்டே இருப்பதால், அதற்குப் பரிணாமமான விகாரம் உண்டு. ஜீவாத்மாக்களில் கர்மத்துக்கு உட்பட்டவர்களுக்கு அஜ்ஞாநமும் துக்கமும் இருக்கின்றன. மோக்ஷம் அடைந்த முக்தனுக்கு அதற்கு முன் தோஷ ஸம்பந்தம் இருந்தது. ஒருநாளும் கர்ம ஸம்பந்தமற்ற நித்யர்களும் அளவுக்கு உட்பட்டவர்கள்; அணுஸ்வரூபிகள்; ஸ்வபாவமாகப் பகவா

னுக்குச் சேஷப்பட்டவர்கள்; பரமஸ்வாதந்த்ரிய மில்லாதவர்கள். இப்படிப்பட்ட குறைகள் ஒன்றும் பகவானுக்கு இல்லை. ஹேய ப்ரத்யநீகத்வத்துக்கு, ஆஶ்ரிதர்களுடைய கெடுதல்களைப் போக்கடிக்கும் ஸ்வபாவமும் ஶக்தியுமுடைத்தாயிருக்கை என்றும் சிலர் பொருள் கூறுவர்.

**ஜ்ஞாநாநந்தைக ஸ்வரூபன்.** ஜ்ஞாநம் ஆநந்தம் இரண்டையும் தனக்கு ஸ்வரூபமாக உடையவன் பகவான்; அவன் ஸ்வயம் ப்ரகாஶ ஆநந்த ஸ்வரூபி; ஸ்வரூபம் இப்படி ஏற்பட்டிருப்பது தவிர, ஆநந்தம் ஜ்ஞாநம் என்கிற கல்யாணகுணங்களையு முடையவன். ‘ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம’ [தைத்-உப.], ‘அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யுர் விஶோக:’ [சாந்-உப.], ‘நிரவத்யம் நிரஞ்ஜநம்’ [ஶ்வே-உப], ‘ஶுத்தஜ்ஞாநமேகோ பரமார்த்தத: ஸ: ப்ரஹ்ம ஸர்வம் நித்யம் அஜம் அக்ஷயம் அவ்யயம் । ஏகஸ்வரூபம் ஸதா ஹேயாபாவாச்ச நிர்மலம் । ஸர்வ ஹேயரஹிதம் விஷ்ணுவாக்யம் பரம்பதம் ॥ அவிகாராய ஶுத்தாய நித்யாய பரமாத்மநே’ (வி-பு) இத்யாதிகள், பகவான் நிர்த்தோஷன், விகாரமில்லாதவன், ஜ்ஞாநாநந்தஸ்வரூபன் என்று சொல்கின்றன.

**அநந்தன்.** நித்யன் அறிவுள்ள பொருள்களினிடத்தும் அறிவில்லாத பொருள்களினிடத்தும் உள்ளும் புறமும் வ்யாபித்துக்கொண்டு, அவைகளில் எக்காலத்திலும் இருந்து, அந்தர்யாமியாய் நியமித்துக்கொண்டு ஸகல வஸ்துவும் தனக்கு ஶரீரமாகவும், இப்படி இன்னொரு வஸ்து இல்லாமலும் இருக்கிறான். ‘ந தத்ஸமஶ்சாப்யதிகஶ்ச த்ருஶ்யதே,’ ‘அந்தர்பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:’ ‘ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம,’ ‘அந்த:ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்,’ ‘நித்யம் விபும் ஸர்வகதம் ஸுஸூக்ஷ்மம்,’ ‘யஸ்ய ஆத்மா ஶரீரம் யஸ்ய ப்ருதிவீ ஶரீரம் ... ... ... ய ஆத்மநி திஷ்டந்’ என்று ஶ்வேதாஶ்வதர தைத்திரீய முண்டக ப்ருஹதாரண்ய

உபநிஷத்துக்களும், 'உடல் மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்', 'மிக்காரையில்லான்,', 'தனியன்', என்று ஆழ்வாரும் கூறியவண்ணம், ஸகல வஸ்துக்களுக்கும் வேறாய், விலக்ஷணமாய், அவைகளைத் தரித்துக்கொண்டு ஆள்பவன். இப்படி எல்லாவற்றிலும் அந்தர்யாமியாயிருந்தாலும், அவற்றின் தோஷங்கள் பகவானைத் தொடரா. '[illegible]' என்று முண்டகத்திலும், '[illegible]' என்று ஸுபாலோபநிஷத்திலும், 'ஆவிசே ருயிரினுள்ளா லாதுமோர் பற்றி பற்றிலாத, பாவனை யதனைக்கூடி லவனையுங் கூடலாமே,' 'மற்றும் முற்றுமாய்;' 'தோய்விலன்' என்று ஆழ்வாரும் சொல்கிறபடியே, ஶரீரத்துக்கு உண்டான இளமை மூப்பு முதலியன எப்படி ஜீவாத்மாவுக்கு இல்லையோ, அப்படி இதரவஸ்து தோஷங்கள் அவைகளில் அந்தர்யாமியான பகவானைத் தொடரா; தொடரவும் முடியா; அவன் அளவிறந்த கல்யாண குணக்கடலாயும், அவைகட்கு இருப்பிடமாயும் இருப்பவன். ஜ்ஞாநம், ஶக்தி முதலிய நற்குணங்களும் நித்யமாய் எப்போதும் எல்லையின்றி அவனிடம் இருக்கும். அவன் ஸ்வபாவமாகவே ஒப்பும் உயர்வும் இல்லாமல் இருப்பவன். '[illegible]' என்று முண்டகத்திலும், '[illegible]' என்று ஶ்வேதாஶ்வதரத்திலும், '[illegible]' என்று விஷ்ணு புராணத்திலும், '[illegible]' [அவனுடைய ஆநந்தத்தை வேதமும் கணக்கிட்டுச் சொல்லமுடியாமல் திரும்பிற்று] என்று தைத்திரீயத்திலும், 'ஈறிலவன்புகழ்', 'உயர்வற வுயர்நல முடையவன்,' 'எண்ணில் தொல்புகழ்' என்று ஆழ்வாரும், '[illegible]' என்று மத்ஸ்ய புராணத்திலும் பகவானுடைய குணங்கள் அளவும் எல்லையுமற்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றன. '[illegible]' அவனுக்கு ஸகல கல்யாணகுணங்களும் நித்யமானவைகள்; அவன் இஷ்டங்களெல்லாம் நிறைவேறின; அவன் பரிபூர்ணன்; அவாப்த ஸமஸ்த காமனுகிற ஸத்யகாமன்; நினைக்கு

மவைகளை முடிக்கிறவன்; அவன் ஸங்கல்பங்கள் நித்யமாய் நிறை வேறுமவைகள்; ஆஶ்ரிதர்களின் துக்கத்தையும் தோஷத்தையும் போக்கடிக்கும் ஸாமர்த்யமுடையவன்; ஸத்ய ஸங்கல்பன்; ஸகல கல்யாண குணங்களையும் ஸ்வபாவமாய் உடையவன்; மோக்ஷத்தில் எப்போது மிருக்கிற கர்ம ஸம்பந்தமற்ற நித்யர்களுக்குக் கூட இக்குணங்கள் பகவததீநம்; பகவானுக்குத் தான் ஸ்வபாவமாயும் எல்லையில்லாததாயும் உள்ள அளவிறந்த குணங்கள் இருக்கின்றன. இதை ‘ஸ்வாபாவிகீ ஜ்ஞாநபலக்ரியா ச’ என்கிற ஶ்ருதி வெளியிடுகிறது.

அபார காருண்ய முடையவன்.

பகவானுடைய முக்ய குணம் க்ருபை. அவன் க்ருபையால் தான் நாம் பகவத் ஜ்ஞாநமடைந்து, பாபங்களைப் போக்கடித்து நிரதிஶயமும் நித்யமுமான மோக்ஷத்தை யடையவேண்டும். ‘தாது: ப்ரஸாதாந்மஹிமாநமாத்மந:’ [கட-உப-I-2-20] ‘ந தபஸா கர்மணா வா । ஜ்ஞாநப்ரஸாதேந விஶுத்தஸத்வ: ..............’ [மு-உப-III-1-8] பகவத் க்ருபையால் அந்த:கரணஶுத்தி உண்டாகி, அவனை ஸாக்ஷாத்கரிக்க வேண்டுமே யொழிய, தபஸ்ஸினாலும் கர்மத்தினாலும் முடியாது. ‘யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம் யோ வை வேதாம்ஶ்ச........ தம் ஹ தேவமாத்மபுத்திப்ரகாஶம் முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே........ ப்ரஸாதாச்ச ப்ரஹ்மணஶ்ச ஸாஶ்வதரோஷ்வஸ்தாத்’ [ஶ்வே. உப] ஆதியில் ப்ரஹ்மாவுக்கு வேதத்தை உபதேஶித்தவனுடைய மஹா க்ருபையால், ஒருவன் ப்ருஹ்ம ஜ்ஞாநமடைவதாய் ஏற்படுகிறது. அந்தப் பகவானைத் தஞ்சமாக அடைய வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

பகவான் நித்யர்களுக்குள் நித்யன். ‘நித்யோ நித்யாநாம் சேதநஶ்சேதநாநாம்’ என்று ஶ்ருதிகள் வெளியிடுகின்றன. அவன் நித்யஸூரிகளால் எப்போதும் ஸ்துதிக்கப்படுகிறான். அவர்களுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கிறான். [‘ஸதா

பஶ்யந்தி ஸூரய: ....... தத்விப்ராஸோ விபந்யவோ ஜாக்ரு வாம்ஸ: ........ பரமம் பதம்’] கர்மத்துக்கு உட்பட்ட இந்த ஜகத்தைப்போல எவ்வளவோ மடங்கு அதிகமான நித்யமான மோக்ஷத்தில் பரிபூர்ணநுபவம் நடந்துகொண்டிருந்தால்கூட, இதரர்கள் கர்மத்துக்கு உட்பட்டு, ‘இப்படிப்பட்ட நிரதிஶயா நந்தத்தை விட்டிருக்கிறார்களே’ என்று ‘ஸ ஏகாகீ ந ரமேத’ என்கிற ஶ்ருதிப்படி அந்த நித்ய ஸூரிகளும் இல்லைபோல் தன் ஹ்ருதயத்தில் மிக வருத்தம் உண்டாகி, கேவலம் தன் க்ருபையால் ‘விசித்ரா தேஹஸம்பத்திரீஶ்வராய நிவேதிதும்’ என்றும், ‘மாயவன் வணங்கவைத்த, கரணமிவை’ ‘சென்று சென்றிலும் கண்டு சன்மங்கழிப்பானெண்ணி, யொன்றி யுலகம் படைத்தான்’ என்றும் சொல்லுகிறபடியே ஜீவாத்மாக்களுக்குக் கரண களேபரங்களையும், ஒருவிதமான ப்ரயத்ந ஶக்தியையும், ஶாஸ்த்ரத்தையும் கொடுத்து, உஜ்ஜீவிக்கும்படி செய்வதோடுகூட, தான் அவர்கள் ஹ்ருதயத்தில் அந்தராத்மாவாயிருந்துகொண்டு காப்பாற்றுகிறான்.

இவர்களைக் காப்பாற்றும்பொருட்டுப் பகவான் [‘அஜாயமானோ பஹுதா விஜாயதே’] அநேக அவதாரங்களைச் செய்கிறான். அவன் க்ருபையே முக்யமென்று ‘நாயமாத்மா ப்ரவசநேந ......... யமேவைஷ வ்ருணுதே தேந லப்ய:’ என்கிற ஶ்ருதி விஷயமாய் அநேக இடங்களில் முன்னமேயே சொல்லியிருக்கிறோம். ‘வேதாந்த விஜ்ஞாந ஸுநிஶ்சிதார்த்தா: ஸந்ந்யாஸயோகாத் ... ... ... பரிமுச்யந்தி ஸர்வே’ [தைத்: உப] அவனுடைய மஹாக்ருபையே ஸாதநம் உபாயம் என்று அவனிடத்தில் ஆத்மாவை ஸமர்ப்பித்து, அவனையே தஞ்சமாக அடைந்து மோக்ஷத்தை அடைவதாகச் சொல்லப்படுகிறது.

அவனுடைய கல்யாண குணங்களில் இந்த க்ருபையை, மஹாமுக்யமாய், நம் ஸித்தாந்தத்தில் ஆசார்யர்கள் விவரித்திருக்கிறார்கள். நம் அபராதங்களைப் போக்கடிக்க இந்த குணம் மஹா முக்யம். வேதார்த்தத்தை இதிஹாஸ புராணங்கள் நன்றாய் விவ

ரிக்கின்றன. 'கார்யம் கருணமார்யேண ந கஶ்சிந்நாபராத்யதி' என்று பிராட்டி, திருவடிக்கு' 'க்ருபை ஆர்யருக்கு முக்யம்' என்று உபதேசித்தனள். பகவத் க்ருபையால் பகவான், அவதாரம் செய்திருப்பதை த்யாநித்துப் பக்தர்கள், அவற்றைவிட்டு மீளாமல் அவதாரத்தையே சூழ்ந்துகொண்டிருப்பார்கள். இதை 'ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந:' என்னும் ஶ்ருதி வெளியிடுகிறது. கண்ணனுடைய நவநீத சௌர்யத்தில் ஈடுபட்டு, ஆழ்வார், 'எத்திறம்!' என்று ஆறுமாஸம் மோஹித்துக் கிடந்தார்.

இப்படி இந்த க்ருபையால் தான், பகவான் மனிதனாக அவதரித்திருக்கிறதாகவும், அந்த க்ருபை தன்னுடைய 'ஸௌலப்யம்' பெரிய மேலான குணமாக இருக்க, மூடர்கள் அதைத் தெரிந்து கொள்ளாமல் அவமதிக்கிறார்கள். [அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாஶ்ரிதம் । பரம் பாவமஜாநந்தோ மம பூதமஹேஶ்வரம் ॥' [பக - கீ - IX 11] 'தேஷாமேவாநுகம்பார்த்தமஹமஜ்ஞாநஜம் தம: । நாஶயாமி (X - 11) [அநுக்ரஹிப்பதற்காகவே பக்தர்கள் உள்ளத்திலிருந்துகொண்டு, கல்யாண குணங்களை ப்ரகாஶிப்பித்துக்கொண்டு கலக்கத்தைப் போக்கடிக்கிறேம்.] 'ததாமி புத்தியோகம்' (X - 10) [அவர்களுக்கு மஹாப்ரேமத்துடன் கூடிய பக்தியை மேலும் மேலும் வ்ருத்தி செய்கிறேம்] 'மத்ப்ரஸாதாதவாப்நோதி ஶாஶ்வதம் பதமவ்யயம் ॥ தத்ப்ரஸாதாத் பராம் ஶாந்திம் ஸ்தாநம் ப்ராப்ஸ்யஸி ஶாஶ்வதம் ॥' என்று கீதையில் பல இடங்களில் கண்ணன், தன் க்ருபையால் நமக்கு நித்யமான மோக்ஷபதவியைக் கொடுப்பதாக அருளிச்செய்கிறார். 'வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருஶம் பவதி து:கித: ।' என்று மனிதர்கள் துக்கத்தில் பெருமாள் (ராமன்) மிக வருத்தப்படுவதாய், அவன் க்ருபையை அபாரமாகச் சொல்லியிருக்கிறது. க்ருபை என்றால், பிறர் துக்கத்தில் தான் வருத்தப்படும் குணம். இந்தக் குணத்தால் தான் தோஷங்களைப் பகவான் பொறுக்கிறான். இந்தக் குணம் பெருமாளிடத்தில் இருந்ததைக்

கொண்டு, ஸுக்ரீவன் அநேக குற்றங்களைச் செய்து, தான் செய்த குற்றங்களையும் மறந்திருந்தபோது, 'அவை தப்பிதம்' என்று தெரிந்த தாரையாகிற அவன் பார்யை? ['கிம் கோபமூலம்'] கோபத்துக்குக் காரணமென்ன? தேவரீர் திருவடிகள் பொறுக்கக் கூடாத பாபங்கள் இருக்கின்றனவா?' என்று சொல்கிறாள். 'என் பிழைத்தாள் திருவடியின் தகவினுக்கு' [I - 4 - 7] என்றார் ஆழ்வாரும். பிராட்டி பெருமாளைக் குறித்து, 'ஆந்ருசம்ஸ்யம் பரோ தர்ம: த்வத்த ஏவ மயா ச்ருத:' [ஸுந் - 38 - 41] 'பிறர் துயரம் காணப் பொறுமையாகிற தீயையே மேலான தர்மம்; இது தான் தமது தன்மை என்று, தாமே நேரில் சொல்லக்கேட்டேன்' என்று அருளிச்செய்கிறாள். 'த்ரௌபதிக்குத் தான் உடனே உதவி செய்திலோம்' என்கிற வருத்தம் கண்ணனுக்கு, தான் இவ்வுலகைவிட்டுப் போகும்போதுகூட, மநஸ்ஸில் புண்பட்டிருந்ததாக பாரதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ['கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம் ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி.']

'உயர்நல மருளினன்' என்றும், பிறர் தஞ்சமில்லாதபோதும் அவன் கைவிடான்? 'பற்றிலார்பற்ற நின்றான்' என்றும், 'குன்றனைய குற்றஞ்செயினும் குணம்' என்னும் ஆழ்வார் அருளிச்செய்கிறார். இந்த மஹாக்ருபையாலேயே, ஜந்மம் நடவடிக்கை முதலியவைகளால் குறைவுபட்டிருந்தாலும், அவனைப்பற்றும் விஷயத்தில் அவன் ஒருவித வித்யாஸமும் பார்க்கிறதில்லை. 'ஸமோऽஹம் ஸர்வ பூதேஷு' [தன்னை ஆஸ்ரயிக்க, எல்லாரையும் ஸமமாய் எண்ணுகிறேன்] என்று கீதையில் கண்ணன் அருளிச்செய்கிறார்.

'மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந । தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேதத் அகர்ஹிதம்' [ஒருவன் என்னிடத்தில் ஸ்நேஹமாய் வந்து அடைந்தால், நான் அவனை ஒருக்காலும் விடேன்] என்று விபீஷணனைப்பற்றிப் பெருமாள்

அருளிச்செய்தார். காகாஸுர வ்ருத்தாந்தத்தில், 'வ்யாஹ்ருதேவ காகுத்ஸ்த: க்ருபயா வயமுபாஸ்மஹே' என்றதனால் தாய் தந்தை முதலான யாவராலும் ரக்ஷிக்க முடியவில்லை; பெருமாள் க்ருபைதான் ரக்ஷகம் என்று தெரிகிறது. இந்தப் பகவத் க்ருபை விஷயமாய் நம்முடைய வைதிக ஸித்தாந்தத்தில் ஸ்ருதீதிஹாஸ புராணங்கள், ஆழ்வார் அருளிச்செயல்கள், இவை எல்லாவற்றைக் கொண்டும் விவரிக்கப்புகுந்தால், அந்த மஹாகல்யாண குணத்தின் ப்ரபாவத்தை ஒருவராலும் நன்றாய்ச் சொல்லமுடியாது. விவரமாய்ச் சொல்லுமிடத்துத் தீபிகையில் அதி விஸ்தாரம் எற்பட்டுவிடு மாகையால், விஷயங்கள் சுருக்கிச் சொல்லப்பட்டன. எனவே, பகவான் கருணைக்கடல் என்றாயிற்று.

## அவன் ஸகல ஜகத்துக்கும் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார கர்த்தா.

'ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத் । ப்ரஹ்மவா இதமக்ர ஆஸீத் । ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத் । ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் । யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே யேந ஜாதாநி ஜீவந்தி । யத்ப்ரயந்த்யபிஸம்விசந்தி ......... தத் ......... ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம ।' என்று சாந்தோக்ய வாஜஸநேயக ஐதரேய மஹோபநிஷத்துகளிலும், தைத்திரீய உபநிஷத்துகளிலும் அவனே ஜகத்துக்கு முதல் காரணம் என்றும், 'ஜந்மாத்யஸ்ய யத:' என்று ஸூத்ரகாரராலும் இவ்விஷயம் வெளியிடப்பட்டிருக்கிறது. தன் ஸங்கல்பத்தால் செய்வதால் வருத்தமற்றிருக்கும். [ 'ஸோகாமயத பஹு ஸ்யாம் ப்ரஜாயேயேதி (தைத். ஆரண். (6. 2 ஜகந்தி ...ஸ்ருஷ்டி ஸம்ஹாரணம் கரோதிய: (வி-பு. V-22. 15)] 'நினைந்த வெல்லாப் பொருள்களுக்கும் வித்தாய் முதலிற் சிதையாமே, மனஞ்செய் ஞானத்துடன் பெருமை' (தி-1-5-2) என்று ஸ்ருதி புராணம் திருவாய்மொழி இவைகள் வெளியிடுகின்றன.

ஸ்ருஷ்டி.

அசித்தை விகாரப்படுத்தி மாற்றி ஸூக்ஷ்மமாயிருப்பதைப் பெரிதாக்குகையும் (பரிணமிப்பிக்கை), ஜீவாத்மாக்களுக்கு ஶரீரம் இந்த்ரியம் முதலியவற்றைக் கொடுத்து ஜ்ஞாநவ்ருத்திக்குத் தகுந்தபடி செய்கையும், இரண்டுக்கும் பெயர்சொல்லி வ்யவஹரிக்க முடியாதிருந்த தஶையிலிருந்து பெயர்களைக்கொண்டு வ்யவஹரிக்கக்கூடிய தஶையை அடைவிப்பதுமே ஸ்ருஷ்டி என்பது. இல்லாததை உண்டுபண்ணுவது அன்று. [‘அஜாமேகாம் ॥ ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ’ (ஶ்வே-உப. 2. 1. 9) ‘அஜோநித்யஶ்ஶாஶ்வதோயம் புராண:’ (பக-II-அதி.) ‘ப்ரதாநம் புருஷஞ்சாபி உபாவப்யநாதீ’ (வி. பு) ப்ரக்ருதியும் ஜீவாத்மாக்களும் நித்யமான வஸ்துக்கள்.]

உலகத்தில் ஒன்றுக்கு மற்றொன்று எல்லாவித காரணமாயிருப்பதை ஸாதாரணமாகக் கண்டிலோம். மரத்தைக்கொண்டு ஒரு பலகை செய்கிறோம். மண்ணைக்கொண்டு ஒரு குடம் செய்கிறோம். மண்ணே மாறிக் குடமாக இருக்கிறது. மண் உபாதாந காரணம். செய்பவன் நிமித்தகாரணம். தவிர சில ஆயுதங்களும் வேண்டும். இப்படி ஒவ்வொரு கார்யத்துக்கும் அநேக காரணங்கள் இருக்கின்றன. அப்படி யில்லாமல் ஜகத்துக்கு ஸகலவித காரணம் பகவான் என்று முன்குறித்த காரணவாக்யங்கள் வெளியிடுகின்றன. ‘யதா ஸோம்யைகேந ம்ருத்பிண்டேந ஸர்வம் ம்ருந்மயம்’ மண்குடத்துக்கு மண்போல ஜகத்துக்கு பகவான் உபாதாநகாரணம். ‘ததாத்மாநம் ஸ்வயமகுருத’ [தானே ஜகத்தாக தன்னுடைய இச்சையால் செய்கிறான்] இப்படி யிருந்தால் தான் ‘யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவதி அமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம்’ (சாங். உப) ‘ஏகவிஜ்ஞாநேந ஸர்வவிஜ்ஞாநம்’ [பகவானைத் தெரிந்துகொண்டால் ஸகலமும் தெரிந்ததாகும். அப்போது ஒன்றைத் தெரிந்தால் ஸகலமும் தெரிந்ததாகும்] என்கிற உபநிஷத்தில் முதலில் சொன்ன ப்ரதிஜ்ஞை நிறைவேறுவதாக எண்ணலாம்.

இந்த அர்த்தத்தை ஸூத்ரகாரர் 'ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தா நுபரோதாத்' என்கிற ஸூத்ரத்தால் வெளியிடுகிறார். அவன் 'ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம' என்று அவிகாரன்; 'நிரஞ்ஜநம் நிஷ்களம்' அவன் ஸ்வரூபத்துக்கு விகாரமில்லை. இவனுடைய ஶரீரமான ஒரு அம்ஶத்துக்குப் பரிணாமமுண்டாவதை 'இவன் ஜகத்தாய்ப் பரிணமிக்கிறான்' என்று சொல்லுகிறது. 'யதோர்ணநாபி: ஸ்ருஜதே க்ருஹ்ணதே ச' (மு. உப. I. 1-7) அல்பஶக்தியுள்ள ஒரு சிலந்திக்கு ஸ்வரூப விகாரமில்லாமல் அதன் ஶரீரத்திலிருந்தே நூலுக்கு அதுவே உபாதாந காரணமானாற்போல் ('பராஸ்ய ஶக்திர் விவிதைவ ஶ்ரூயதே) அநேக மஹா விசித்ர ஶக்தியுடைய பகவானுக்கு இது ஆஶ்சர்யமன்று.

ஸ்திதி, ஸம்ஹாரம்:—ஸ்ருஷ்டமான வஸ்துக்களிலே பயிருக்கு நீர்நிலைபோல அநுகூலமாக ப்ரவேஶித்து நின்று ஸர்வ ரக்ஷணங்களையும் பண்ணுகை. 'தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத்' (தை. உப. 6. 2). ஒரு வ்யாபாரத்துக்கு அர்ஹன் அல்லாதபடி கரணங்களை ஒடுக்கிவிட்டு வைக்கை என்பது ஸம்ஹாரம். ஸ்ருஷ்டியில் ப்ருஹ்மா முதலானவர்களுக்கு அந்தர்யாமியாயும், ஸ்திதியில் விஷ்ணுவாயும் அவதரித்து மநு முதலானவர்கள் முகமாய் ஶாஸ்த்ரத்தைக் கொடுத்து நல்வழிகாட்டி ஸகல பூதங்களுக்கும் அந்தர்யாமியாயும், ஸம்ஹாரத்தில் ருத்ரன் முதலானவர்களுக்கு அந்தர்யாமியாயுமிருந்துகொண்டு பகவானே எல்லாம் செய்கிறான்.

இவைகளைப் பகவான் கர்மமடியாக நடத்திக்கொண்டுபோவதால், அவனுக்குப் பக்ஷபாதம் நைர்க்ருண்யம் முதலான தோஷங்கள்கிடையா. 'வைஷம்ய நைர்க்ருண்யே ந ஸாபேக்ஷத்வாத்' என்று ஸூத்ரகாரர் சொல்லுகிறார். இவனுக்கு 'முந்நீர் ஞாலம் படைத்த வெம்முகில் வண்ணன்' என்று ஒரு அத்யாஶ்சர்யமான அப்ராக்ருதமும் தேஜோமயமுமான ரூபமிருக்கிறது என்பதைப் பிறகு மற்றொரு ப்ரகரணத்தில் விவரிப்போம்.

எஸ்-கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

# ஐரோப்பிய யுத்தத்தின் முடிவு.

"ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம்
ந்யாய்யேந மார்கேண மஹீம் மஹீசா: ।
கோப்ராஹ்மணேப்ய: சுபமஸ்து நித்யம்
லோகா: ஸமஸ்தா: ஸுகிநோ பவந்து ॥"

என்பது நம்மால் ப்ரதி தினம் செய்யப்படும் ப்ரார்த்தனை. சென்ற நாலரை வர்ஷ காலமாக ஐரோப்பா என்னும் கண்டத்தில் ஓர் மஹா யுத்தம் நடந்து வந்தது என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அதில் கணக்கற்ற ஜனங்கள் அகாலத்தில் ம்ருதி யடைந்தார்கள். அதனால் இப்பொழுது ஜகத்திற்கு ஏற்பட்டிருக்கும் க்ஷோபமும் இவ்வளவு என்று பரிச்சேதிக்கக் கூடாதது. 'இந்த க்ஷோபமும் நிவ்ருத்தியாகுமோ? அதிதுக்ககரமான இந்த ஜந நாசமும் முடிவு பெறுமோ?' என்று மிகவும் சிந்தா க்ரஸ்தராக சோகித்திருந்தோம். அபார கருணாநிதியான ஸ்ரீ பகவான் அந்த யுத்தத்தை இப்பொழுது நிவ்ருத்தித்துவிட்டார் என்று கேள்விப்பட்டு நாம் மிகுந்த ஸமாச்வாஸத்தை அடைகிறோம்.

அந்த யுத்தம் ஜர்மனி என்னும் தேசத்தின் அரசனுடைய துராக்ரஹத்தால் நேர்ந்ததென்றே நமக்குக் கிடைத்திருக்கும் வ்ருத்தாந்தங்களிலிருந்து தெரியவருகிறது. பூலோகம் முழுவதையும் தான் ஏகாதிபதியாக ஆளவேண்டும் என்னும் கெட்ட எண்ணத்துடன் அந்த அரசன் இந்த யுத்தத்தில் ப்ரவ்ருத்தித்தானென்றும், எவ்வித அபராதத்தையும் அறியாத அநேக சிற்றரசர்களை அவர்களுடைய ராஜ்யத்திலிருந்து அடித்துத் துரத்தி அந்த ராஜ்யங்களிலிருந்த ஜனங்களுக்கு மஹத்தான உபத்ரவத்

தைச் செய்வித்தானென்றும், தனது பேராசையை ஸாதித்துக் கொள்வதிலேயே ஊக்கமுள்ளவனாய் மதம் பிடித்த துஷ்ட ம்ரு கம்போல ந்யாயாபந்யாய விசாரமின்றிக்கே ஜகத் முழுவதற்கும் பெரியதொரு அஸ்வாஸ்த்யத்தைச் செய்ய முயன்றானென்றும் நமது ஆப்தரர்கள் சொல்ல நாம் கேள்விப்படுகிறோம். பகவத் க்ருபையால் அவனுடைய முயற்சியெல்லாம் வீணாகிவிட்டது. ஸ்ரீ பகவான் ஜகத்திலுள்ள மற்றை அரசர்களெல்லாரையும் நிமித்த மாகக்கொண்டு அந்தத் துஷ்டனுடைய ஸங்கல்பத்தைப் பங்கம் செய்ததுடன்,

‘ அத்யுத்கடை: பாபபுண்யைரிஹைவ ஃபலமச்நுதே ’

என்கிறபடி அவனுக்கு இந்த லோகத்திலேயே இப்பொழுதே தகுந்த சிக்ஷையையும் செய்துவிட்டார். அவனுடைய ஆஜ்ஞைக்கு உட்பட்டும் அவன் சொல்வதே தர்மமென்று நினைத்தும் வர்த்தித்து வந்த அவனுடைய அநுபந்திகளே, இப்பொழுது அவனது அதர்மத்தை உணர்ந்தவர்களாய், அவனுக்கு ஆநுகூல்யத்தைச் செய்ய ப்ரவ்ருத்தித்ததால் தமக்கு ஸம்பவித்திருக்கும் மஹா விபத்துக்களைப் பார்த்து வெறி பிடித்து அவன்மீது ஆக்ரோசம்கொண்டு அவனை நசிப்பிக்க உத்யுக்தர்களாய் இருக்கிறார்களாம். இதைக்கண்ட அவன், ராஜ்யத்தையும் பந்து ஜநங்களையும் த்யஜித்துவிட்டு தேசாந்தரம் ஓடி ஒளிந்திருக்கிறானாம். அமாநுஷ போகங்களோவென்று நினைக்கக் கூடியபடி உயர்ந்த போகங்களை அவ்யாஹதாஜ்ஞனாக நேற்று புஜித்துவிட்டு, இன்று வீடுவாசலை யிழந்து தேசாந்தரம் ஓடி ஒளிந்து ஒரு கபளச் சோற்றுக்கு வருந்தி நிற்கும் ஸ்திதியைவிட வேறு என்ன உக்ரமான சிக்ஷை ஒரு மநுஷ்யனுக்கு இந்த லோகத்தில் வேண்டும்? அவன் அக்ரமத்தில் ப்ரவ்ருத்தித்தான் என்பதற்கு, இந்த ஸ்திதி அவனுக்கு நேர்ந்ததே பெரியதொரு நிதர்சநமாகின்றது.

இந்த யுத்தம் முடிவு பெற்றதில் நமக்கு அநேக ப்ரகாரத்தால் ஸந்தோஷம் உண்டு. துஷ்ட எண்ணத்துடன் கூடியவர்கள் தங்களுக்கு அநுரூபமான சிக்ஷையை அடைந்தார்கள் என்பது ஒரு ப்ரகாரம். ஜநங்களுடைய நாசம் மிதப்பட்டது என்பது மற்றொன்று. லோகத்திற்கு இந்த யுத்தத்தால் ஸம்பவித்த துர்பிக்ஷம் முதலிய க்லேசங்கள் இனிக் குறைபடுமென்பது மூன்

ருவது. இவையெல்லாவற்றையும் விட விசேஷித்த ஆஹ்லாதத்திற்கு ஹேதுவாயிருப்பது மற்றுமொன்று உண்டு. அது என்னவென்றால், ந்யாயம் இருக்குமிடத்தில்தான் ஜயமும் இருக்கும் என்பதை இந்த யுத்தம் ஸகல தேசாதிபதிகளுடைய மநஸ்ஸிலும் நன்கு உணர்த்தி யிருக்கிறது என்பதுதான். இந்தத் துஷ்டனுக்கு எதிரில் நின்று யுத்தம் செய்த தேசாதிபதிகள் எல்லாரும், இப்பொழுது இவனுக்குப் பங்கம் ஜநிப்பித்ததைப் பெரிதாக நினையாமல், இனி இம்மாதிரி துஷ்டர்கள் ஸாதுக்களிடம் துராக்ரமம் செய்வதைத் தடுப்பதிலும் தர்மத்தை சாஸ்வதமாக ஸ்தாபிப்பதிலும் மிகுந்த நோக்கத்துடன் முயற்சி எடுத்துக்கொள்வதாகத் தெரிய வருகின்றது. அமெரிகா தேசத்து ஐக்ய மாஹாணத்தின் அதிபதியாயிருக்கும் ப்ரெஸிடென்ட் வில்ஸனுடைய ப்ரேரணையின்பேரில் இந்த லோகத்தில் பரிகணிதர்களாயுள்ள தேசாதிபதிகளெல்லாரும் ஒரு ஸமாஜமாகச் சேர்ந்து, இனி ஜர்மெனி அரசன்போன்ற துஷ்டர்களுக்கு ப்ரசாரம் ஸம்பவியாமல் இருப்பதற்கு வேண்டுவனவான உபாயங்களை ஆலோசிக்கப் போகிறார்களாம். இப்பொழுது, ஒரு தேசத்து ஜநங்களுக்குள் பரஸ்பரம் அதர்ம ப்ரவ்ருத்தி நேராமல் இருக்கும்படி சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றனவே தவிர, ஒரு தேசம் மற்றொரு தேசத்தைக் குறித்தாவது ஒரு தேசத்தில் ராஜ்ய ப்ரவர்த்தகர்களாக இருக்குமவர்கள் தமக்கு உட்பட்டிருக்கும் ப்ரஜைகளைக் குறித்தாவது ஒரு அக்ரமத்தைச் செய்தால் அதைத் தடுக்கும்படியான சட்டம் க்ருப்திகரமாக ஏற்படவில்லை. அப்படி ஏற்பட்டிருந்தபோதிலும் அவிவேகிகளான துஷ்டர்கள் தமது ஸ்வாதந்த்ரயத்தையும் பராக்ரமத்தையும் அவலம்பித்து அச்சட்டத்தை அநாதரித்துத் தமது இச்சைப்படியே நடக்கிறார்கள். இந்த ஸ்திதியைச் சீர்திருத்துவதும் இப்பொழுது சேரப்போகும் ஸமாஜத்தின் நோக்கமாம். அதாவது லோகத்தில் சக்தர்கள் அசக்தர்களை ஹிம்ஸிப்பது என்பது துஸ்ஸாத்யமாயும், கேவலம் பலத்திற்கு ப்ராதாந்யமில்லாமல் ந்யாயத்திற்கே ப்ராதாந்யம் கிடைக்கும்படியாயும் சில ஏற்பாடுகளைச் செய்யப்போகிறார்களாம். தமோகுண பூயிஷ்டமாயுள்ள இந்த ஜகத்தில் ஸாத்விகாம்சத்தைப் பெரும்பாலும் அபேக்ஷித்து நிற்கும் இந்தச் சீர்திருத்தம் எவ்விதத்தில் நிஷ்பந்நமாகுமோ நமக்குத் தெரியவில்லை. நிஷ்பந்நமானாலும் ஆகாவிட்டா

லும், இதை ஸாதிக்க வேணுமென்று முயலும் மஹாங்களுடைய ஸாத்விக பாவத்தை நாம் மிகவும் அபிநந்திக்கிறோம். நிஷ்பக்ஷமானல், ந்யஸ்த ஶஸ்த்ரர்களாயும் '[illegible]' என்று மாத்ரம் கதற போக்யர்களாயும் இருக்கும் நமது தேஶத்து ஜநங்கள்தாம் எல்லாருக்கும் முன்னதாக ஆநந்திக்கவேணும். குருடன் வேண்டுவது கண்ணே. கலியுக தர்மத்தை விலக்கி க்ருதயுக தர்மத்தை ஸ்தாபிக்க முயலும் இந்த மஹாங்களுடைய முயற்சிக்கு ஸர்வவித ஸாது நிஷ்பத்தியையும் பகவான் அநுக்ரஹிக்க வேணுமென்று அந்த நிஷ்பத்தியின் முக்ய பல போக்தாக்களாக இருக்கும் நாம் ஹார்த்தமாகவும் பூர்ண உத்ஸாஹத்துடனும் ப்ரார்த்திக்கிறோம்.

'[illegible] ।
[illegible] ॥'

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

ஸ்ரீ:

[illegible]

# எட்டாவது ஸ்ரீவைஷ்ணவ மஹாஸங்கம்.

## ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபை, மயிலாப்பூர், மதிராஸ்.

பூவிருந்தவல்லி ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் ஆஹ்வாநத்தின் பேரில், மதிராஸ் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் எட்டாவது வார்ஷிக மஹா ஸங்கம் நாளது காளயுக்தி வரு மார்கழி மீ 13, 14, 15, 16-ம் தேதிகளில் (1918 டிஸம்பர், 28, 29, 30, 31,) ஸ்ரீ திருக்கச்சி நம்பியின் அவதார ஸ்தலமாகிற பூவிருந்தவல்லியில் ஸ்ரீ பகவத் க்ருபையை முன்னிட்டு நடைபெறுகின்றது. அப்பொழுது திருக்கோட்டியூர் வித்வான் ஸ்ரீ. உ.ப. ஸௌம்ய நாராயணாசார்ய ஸ்வாமி, முதல் தினத்தில் அக்ராஸநாதிபத்யத்தை வஹித்து ஸதஸ்ஸை ப்ரவ்ருத்திப்பிக்க க்ருபையுடன் திருவுள்ளம்பற்றியிருக்கிறார். அநேக பரிகணிதர்களான வைதிக பண்டிதர்களும் லௌகிக ஆஸ்திகர்களும், நமது வேதாந்த விஷயமாகவும் உபந்யாஸங்களைச் செய்ய அங்கீ

கரித்திருக்கிறீர்கள். ஆஸ்திகர்களாயுள்ள ஸகல பாகவதர்களும் அக்காலத்தில் அவ்விடத்திற்கு எழுந்தருளி ஸதஸ்ஸை அலங்கரிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இந்த ஸதஸ் நடக்கும் காலத்தில் யதாபூர்வம், ஸ்ரீ பாஷ்ய ச்ருத ப்ரகாசிகா ஸஹித ஸ்ரீ ஹாஷ்யத்தில் ஒரு பண்டித பரீக்ஷையும் நடைபெறும். அந்தப் பரீக்ஷையின் லிகிதமான அம்சம், ஸதஸ்ஸின் இரண்டாவது தினமாகிற 14-ம் உ காலை 8-30-மணிக்கும், வாசிகமான அம்சம், ஸதஸ்ஸின் நான்காவது தினமாகிற 16-ம் உ காலை 8-30 மணிக்கும் நடைபெறும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அந்தப் பரீக்ஷையில் பரீக்ஷ்யர்களாக அந்வயிக்க இச்சையுள்ள வித்வான்களெல்லாரும் வருகிற மார்கழி மீ 1உக்கு (16 - 12 - 18) முன்னதாகவே கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் விலாஸத்திற்குத் தமது பெயரையும் விலாஸத்தையும் கண்டு ஒரு பத்ரிகையை அனுப்பவேணுமென்று ப்ரார்த்திக்கிறோம். இருகலையாரும் இந்தப் பரீக்ஷையில் அந்வயிக்க அர்ஹர்கள். இதைப்பற்றிய மற்றை அம்சங்கள், அவைகளை அபேக்ஷிப்பவர்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.

ஸங்கத்தில் நடக்கப்போகும் உபந்யாஸங்களின் க்ரமம், இப்பொழுது நிச்சயித்திருக்கிறபடி, மறு பக்கத்தில் குறிக்கப்பட்டிருக்கின்றது. மற்றும் சில பண்டிதர்கள் ஆஹ்வாநம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் உபந்யஸிக்கும் விஷயம் முதலான அம்சங்கள் அடுத்த ஸஞ்சிகையில் ப்ரசுரம் செய்யப்படும்.

மயிலாப்பூர்,
காளயுக்திஸ்ரீ
கார்த்திகை, 15உ
(30-11-18.)

தட்டை தி. ரங்காசார்யர்
(ஸ்ரீ. வை. ஸி. ஸபா அத்யக்ஷர்)
ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்
தி. கோதண்டராம ஐயங்கார்
(ஸபையின் கார்யதர்சிகள்.)
என். எஸ். பட்டாசார்யர்
(பூவிருந்தவல்லி ஸபையின் அத்யக்ஷர்.)

13உ சனிக்கிழமை (28 - 12 - 18).

| | | |
|---|---|---|
| காலை 8-30 மணி | i. | ஸ்வாகதம்-ஸ்ரீ.உப.என்.ஸ்ரீநிவாஸபட்டாசார்யர். |
| | ii. | அக்ராஸநாதிபதியின் உபந்யாஸம். |
| மாலை 2 மணி | i. | "ஹித நிரூபணம்" ஸ்ரீ. உப. சதுச்சாஸ்த்ர வேத கல்பதரு சேஷாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை. |
| | ii. | "நாராயணோ ஜகத்காரணம்" - ஸ்ரீ. உப. கோயில் கந்தாடை வித்வான் புத்தூர் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருமழிசை. |
| ஸாயம் 6 மணி | | பூவிருந்தவல்லிப் பெருமாள் மங்களாசாஸநம். |
| இரவு 8-30 மணி | | புராண ப்ரவசநம். |

## 14வ ஞாயிற்றுக்கிழமை (29 - 12 - 18).

காலை 8-30 மணி
i. ஸபையின் அங்கத்தினர்களின் ஸங்கம்.
ii. "பகவத் விஷயம்" - ஸ்ரீ. உப. சேட்லூர் வித்வான் நரஸிம்மாசார்ய ஸ்வாமி, திருவஹீந்த்ரபுரம்.
iii. "வைதிக விஶ்வாஸம்"-ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி.

மாலை 2 மணி
i. "[illegible]" - ஸ்ரீ. உப. கோயில் கந்தாடை வித்வான் அப்பனையன் ராமாநுஜாசார்ய ஸ்வாமி, திருமழிசை.
ii. "ஸ்வரூப ரக்ஷை" - ஸ்ரீ. உப. எ. க்ருஷ்ண ஐயங்கார் ஸ்வாமி, திருநெல்வேலி.

ஸாயம் 6 மணி
முதலியாண்டான் மங்களாஶாஸநம்.

## 15வ திங்கள் கிழமை (30 - 12 - 18).

காலை 8-30 மணி
i. "வேத ப்ராமாண்யம்" - ஸ்ரீ. உப. இஞ்சிமேடு வித்வான் ரங்கநாதாசார்ய ஸ்வாமி.
ii. "[illegible]" - ஸ்ரீ. உப. கோயில் கந்தாடை ராயஜீ வித்வான் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருமழிசை.

மாலை 2 மணி
i. "விவாஹ விஷயமான சட்டம்" - ஸ்ரீ. உப. அக்நிஹோத்ரம் வித்வான் கோபாலதேஶிகாசார்ய ஸ்வாமி, திருக்குடந்தை.
ii. "க்ருஹஸ்த தர்மம்"-ஸ்ரீ. உப. வாஜபேயம் வித்வான் வீரராகவதாதாசார்ய ஸ்வாமி.

ஸாயம் 6 மணி
திருமழிசைப் பெருமாள் மங்களாஶாஸநம்.

இரவு 8 மணி
ஹரிகதை.

## 16வ செவ்வாய்க்கிழமை (31 - 12 - 18).

காலை 8-30 மணி
வித்வத் ஸதஸ், பண்டித பரீக்ஷை, பண்டித ஸம்மாநம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:,

## ஸ்ரீ. உ.வே. கபிஸ்தலம் ரங்கநாதாசார்யர்.

திருப்பதி என்னும் திவ்யதேஶத்தை அநேக வர்ஷகாலமாக அலங்கரித்துவந்த ஸ்ரீ. உ.வே. கபிஸ்தலம் ரங்கநாதாசார்ய ஸ்வாமி என்னும் வைதிகவித்வான், சென்ற ஐப்பிசி மாஸம் 17உ இந்த விபூதியை விட்டுத் திருநாட்டுக்கு எழுந்தருளிவிட்டதாக நாம் கேள்விப்பட்டு மிகவும் துக்கிக்கிறோம். வைதிக ஸ்ரீயின் அபிவ்ருத்தியை ஆஶம்ஸித்துக்கொண்டிருக்கும் நமக்கு, இம்மாதிரியான வைதிக வித்வச் சிரோமணிகளின் திரோதாநம் மஹத்தான நஷ்டமே. ஒரு ஜ்யோதிஸ் அஸ்தமித்தால், அதன் ஸ்தாநத்தில் தத்துல்யமான மற்றும் ஒரு ஜ்யோதிஸ் உதயமாகா விடினும் தத்ப்ராயமான ஒரு ஜ்யோதிஸ்ஸாவது உதயமானால், லோகத்தை இருள் பூர்ணமாக மூடிவிடாது. அப்படிப்பட்ட ஜ்யோதிஸ்ஸ்தாநீயர்களான வ்யக்திகள் கூட இக்காலத்தில் ஆவிர்பவிப்பதை நாம் கண்டிலோம். க்வசித் க்வசித் இரண்டொருவர் ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மையே. ஆனால் அதி பீஷணமாய்த் திரண்டுவரும் நாஸ்திக்யத்தையும் அஜ்ஞாநத்தையும் தடுப்பதற்கு அந்த வைதிக பலம் அபர்யாப்தமாகவே இருக்கிறது என்பது நமது ஶங்கை. அதுவும் காலத்தின் ப்ரபாவமே.

ப்ராக்ருதமான இந்த வித்வான், ஆதிகாலத்தில் கேதாண்டப்பட்டி என்னும் ஒரு ஶ்ரோத்ரிய க்ராமத்தில் வித்யா ப்ரவசநம் செய்துகொண்டிருந்ததாயும், பிறகு திருப்பதியில் ஸ்ரீ மஹந்து ஸம்ஸ்க்ருத பாடஶாலையில் தர்க்க பண்டிதராக எழுந்தருளியிருந்து அநேக ஶிஷ்யர்களுக்குத் தர்க்க பாடம் சொல்லியிருப்பதாயும் நாம் கேள்விப்படுகிறோம். தர்க்கத்தில் ஜ்ஞாநத்துடன், ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த விஷயத்திலும் அபரிமிதமான ஜ்ஞாநம் அவருக்கு உண்டு. இரண்டொரு தடவை அவருடைய ஸமாகமத்தையும் ஸம்பாஷணத்தையும் பெறும்படியான பாக்யம் நமக்கு ஸம்பவித்தது, அக்காலத்தில் அந்த ஸ்வாமியின் யோக்யதைகளைக் கிஞ்சித் கிஞ்சித் அநுபவித்தோம். ஒவ்வொரு அம்ஶத்திலும் அந்த யோக்யதைகள் பூர்ணமாக இருக்கையிலும், அவருடைய கவிதா சாதுர்யமே மிக ஶ்லாக்யமாக நமக்குத் தென்பட்டது. அநேக க்ரந்தங்கள் அந்த ஸ்வாமியின் முகமாக ஏற்பட்டிருக்கின்றனவாம். ஆஸ்திகரான தநிகர்கள் அவைகளை அச்சுப் பதிப்பித்து ப்ரசுரம் செய்தால் ஜகத்திற்கு மிகவும் உபகாரகமாக இருக்கும். திருவெவ்வுளூரில் நடைபெற்ற நமது ஐந்தாவது மஹா ஸங்கத்தில், இந்த ஸ்வாமி அநு

க்ரஹித்த உபந்யாஸத்தை நமது அபிமானிகள் எல்லாரும் அநுபவித்திருக்கலாம். ஸர்வ ப்ரகாரத்தாலும் அது ஶ்லாக்யமாக இருந்தது என்பதை நாம் சொல்லவும் வேண்டுமோ? அப்படிப்பட்ட மஹானை இழந்துவிட்டோமே என்று நாம் துக்கிக்கிறோம். அவருடைய திருத்தனயனான ஸ்ரீ. உப. மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் தேஶிகாசார்ய ஸ்வாமிக்கு இது அஸஹ்யமான வியோகமே. 'காலோ ஹி துரதிக்ரம:' என்பது தான் ஸமாதாநம்.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்.

---

ஸ்ரீ:.

## ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின்

### சந்தா வரவு.

(1-10-18—23-11-18.)

**1918 - 19 - ம் வருஷத்திய சந்தா :—**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், நாயுடுஜெல்ல ... | 3 | 0 | 0 |
| 2. | எஸ். வாஸுதேவாசார்யர், மயிலாப்பூர் ... | 5 | 0 | 0 |
| 3. | டி. ஆர். சாரங்கபாணி ஐயங்கார், மயிலாப்பூர் ... | 3 | 0 | 0 |
| 4. | வி. துரைஸ்வாமி ஐயங்கார், சேலம் ... | 3 | 0 | 0 |
| 5. | ஆர். வி. கிருஷ்ணமாசார்யார், கும்பகோணம் ... | 3 | 0 | 0 |
| 6. | எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர் ... | 5 | 0 | 0 |
| 7. | வி. வயித்தியநாதஸ்வாமி ஸ்தபதி, திருவாரூர் ... | 1 | 8 | 0 |
| 8. | பி. தேசிகாசார்யர், சேலம் ... | 3 | 0 | 0 |
| 9. | டி. ராமய்யங்கார், திருநெல்வேலி ... | 3 | 0 | 0 |
| 10. | பி. எஸ். துரைஸ்வாமி ஐயங்கார், பாக்கம் ... | 3 | 0 | 0 |

**1917 - 18 - ம் வர்ஷத்தியச் சந்தா :—**

| | | | | |
|---|---|---|---|---|
| | என். டி. ஸ்ரீராமாசார்யார், திருப்பாப்புலியூர் ... | 3 | 0 | 0 |

**வித்வத் சதஸ் சந்தா :—**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | ஸி. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், நாயுடுஜெல்லா ... | 3 | 0 | 0 |
| 2. | எம், எதிராஜய்ய காரு, கூடூர் ... | 10 | 0 | 0 |
| 3. | வி. துரைஸ்வாமி ஐயங்கார், சேலம் ... | 3 | 0 | 0 |
| 4. | எஸ். வரதாசார்யர், மயிலாப்பூர் ... | 15 | 0 | 0 |
| 5. | ராவ் சாஹேப். டி. நம்பெருமாள்செட்டியார், சேத்துப்பட்டு ... | 10 | 0 | 0 |
| 6. | பி. கே. கருடாசார், பெங்களூர் ... | 10 | 0 | 0 |
| 7. | என். ராஜகோபாலாசார்யர், மயிலாப்பூர். ... | 4 | 0 | 0 |